இன்சுவைக் கதைகள்



கழக வெளியீடு



தங்கவால் பறவையும் கிளிமொழியும்

இன்சுவைக் கதைகள்


(இரண்டாம் புத்தகம்)

க. தங்கவால் பறவை

நினைவுக்கெட்டாத நெடுங்காலத்துக்கு முன் சேர நாட்டை ஆண்டுவந்த ராணி அழகில் சிறந்தவளாக இருந்தாள். அதனுல் அவளுக்கு அகம்பாவம் தலைக் கேறிப் போயிருந்தது. அழகில்லாதவர்களைக் கண்டால் அவளுக்கு வெறுப்பும் ஏளனமும் உண்டாகும்.

ஒருநாள் இக்கொடிய ராணி ஊர் சுற்றி உலாவ வருகையில் ஏழ்மை நிறைந்த ஓர் ஓலைக் குடிசையின் முன் புறத்தில் கூனலும் குறுகலுமான நொண்டிப்பையன் ஒருவன் இருப்பதைக் கண்டாள். "அட அவலட்சணமே," என்று கூறி அவள் எள்ளி நகையாடினுள். அச் சுடு சொல்லையும், ஏளனச் சிரிப்பையும் பொருத அந்தப் பையன் குடிசைக்குள்ளிருந்த தன் தாய் முகம் நோக்கி விம்மி விம்மி அழுதான். அவன் தாய் அதுகண்டு வருத்தமும், கோபமும் அடைந்தாள். அவனது துன்ப நிலைக்கு மனமிரங்காமல் ராணி சிரித்துச் சென்ற கொடுமையை அவள் அரசமரத்து அணங்கிடம் முறையிட்டாள்.

"ராணிக்குச் சரியான பாடம் கற்பிக்கிறேன்," என்று அரசமரத்து அணங்கு அவளுக்குத் தேறுதல் கூறியனுப்பியது. அந்த ராணிக்கு எழில்வரம்பன் என்னும் பெயருள்ள ஒரே ஒரு மகன் இருந்தான். அந்த வட்டா



உலாவ வருகையில் ராணி நொண்டிப்பையனைக் காணல்

ரத்திலேயே அவனுக்கு ஈடான அழகுள்ள எவருமே இல்லை என்பதால் ராணி அவனைக் குறித்து அளவற்ற பெருமை கொண்டிருந்தாள். அவள் உலாச் சுற்றிவந்த சிலநாட்களுக்குள் எழில்வரம்பன் உடம்பெல்லாம் உரோமம் வளரத் தொடங்கிற்று. கைகளையும் ஊன்றி

நாலுகாலால் அவன் நடக்க ஆரம்பித்தான். வெறுமனே வளர்த்துவானேன்; ராணி மகன் கரும் பன்றியாக மாறிவிட்டான்.



வள்ளி அரசமரத்து அணங்கை வேண்டிக்கொள்ளல்

...தைப் பார்த்ததும் ராணி மனம் என்ன பாடு பட்...க்கும் என்று சொல்லவா வேண்டும். தேம்பித் தே... அழுதுகொண்டே அவள் அரசமரத்து அணங்

கிடம் சென்று மண்டியிட்டு, "என் ஆசைமகனை முன் போல் அழகுடன் விளங்க வைக்கவேண்டும்," என்று கெஞ்சிக் கேட்டாள். ஆனால், அரசமரத்து அணங்கு ஏதோ முணுமுணுத்துக் கூறிவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டது. அது என்ன சொல்லிற்று என்று புரிய முடியாத நிலையில் ராணி மனம் சோர்ந்து உள்ளம் வெதும்பி அரண்மனை சேர்ந்தாள். அங்கே தன் மகன் சேற்றில் புரண்டெழுந்து, பார்க்கப் பிடிக்காத அருவருப்பான நிலையில் இருப்பதைக் கண்டு அவள் நெஞ்சு நைந்து வருந்தியது.

ஆனால், எழில்வரம்பனுக்குத் தான் ஏன் இப்படி உருக்குலைய நேர்ந்தது என்பது தெரியும். அவனது உயிரைக் காப்பாற்றி வரும் காவல்தேவதை உண்மை விவரங்களை அவனது கனவில் அவனுக்கு அறிவித்திருந்தது. அழகில் சிறந்த பெண் ஒருத்தி மனமிசைந்து அவனை மணம் செய்துகொள்ளாவிட்டால், வாழ்நாள் முழுவதும் தான் பன்றியாகவே இருக்கவேண்டும் என்பது அவனுக்குத் தெரியும். ஒருநாள் அவன் வயல்மேட்டில் அலைந்து திரியும்போது பண்ணைக்காரப் பழனிவேலன் வீட்டுப் பக்கம் வந்தான். பழனிவேலன் ஏழைக் குடியானவன்தான். ஆனால், அவன் பெண்களும் மூவரும் தேவ மகளிரையும்விட அதிக அழகுடன் விளங்கினார்கள்.

மூத்த மகள் வீட்டு வாசலில் நின்றாள். பன்றியுருவான எழில்வரம்பன் அவள் பக்கமாகச் சென்றான். "அட பன்றியே! எட்டிப் போ," என்று சொல்லி அவள் அவனைத் தடியால் தாக்கி விரட்டினாள். உருண்டு விழுந்த எழில்வரம்பனுக்கு மேலெல்லாம் காயம்.

அவன் வெட்கத்தால் மனம் குன்றிணிவை வருவித்
இளவரசனைப் பண்ணைக்காரப் பெண் ஒதுங்கி வந்தான்.
சிறுமைப் படுத்துவதா? அரண்மனை'தற்கு மாறாகக்
அவன் தன் படுக்கையறைக் கதவைணியே," என்று
கொண்டு பலநாள் உண்ணாமல், தின்று
கிடந்தான். ஆயினும், சிலநாளில் சற்று .ன் இன்னும்
தன் நல்வாழ்வைக் கருதி மீண்டும் அவ மிக்க பெண்
பெண்ணைத் தேடி வெளியே புறப்பட்டான். க்கு என்மீது
காரனின் இரண்டாவது மகள் அன்று த ண்டினான்.
படிக்கட்டில் உட்கார்ந்திருந்தாள். ஆனால், | பிறக்கத்
பன் அவள் பக்கமாக வந்ததும், "சீ பன் க் கேட்டு
வராதே," என்று அவள் அவனை எட்டி உதைத் விட்டது.

எழில்வரம்பனுக்கு உலகமே இருண்டது ண்ணைந்
விட்டது. 'தனக்கு அழகான பெண் கிடைக்கப் யாணன்
மில்லை; தன் பன்றியுருவம் மாறப்போவ ான். விடு
என்று தோன்றிவிட்டது. எனவே, அவன் அ என்மீ,
யில் கட்டிலுக்கடியில் படுத்துக்கொண்டு வெ றள்.
வெளியே தலை நீட்டவே மறுத்துவிட்டான். ார்ச்சியா
ண் ஊதா

ஆனாலும் ஆசை விடுமா? மறுபடியும் ெ ாப்
மெள்ள பண்ணைக்காரன் வீட்டுப்பக்கமாக வந் கவ
ெ களத்தில் பண்ணைக்காரனின் கடைக்குட்டி ங்க
கி மொழியாள் நின்றுகொண்டிருந்தாள். எழில்வரம்பன்
வர் ம் வழியில் உள்ள குட்டைகளில் முழுகி எழுந்து
மற்ற நாட்களையும்விட அதிக விகாரமாக இருந்தான்.
"இவள் என்னை உதைத்தனுப்பினால் இன்றோடு என்
வாழ்நாள் முடிந்துவிடும். தற்கொலை செய்து என்
உயிரை மாய்த்துக்கொள்வேன்," என்று மனதிற்குள்
சொல்லிக்கொண்டான். தன் கடைகெட்ட நிலையைத்

கிடம் சென்று ப
போல் அழகுட
கெஞ்சிக் கேட்
ஏதோ முணு
பிக்கொண்ட
புரிய முடியா
வெதும்பி
சேற்றில்
வருப்பான
நைந்து வ

ஆ
உருக்கு
உயி
விவரங்
திருந்தத
அவனை
முழுவ
என்ட
வயல
பழ
என



கிளிமொழி அருகில் எழில்வரம்பன் நெருங்கிவரல் அற

தானே அறிந்திருந்தும் சிறிது மனத்துணிவை வருவித்துக்கொண்டு கிளிமொழியாள் அருகில் நெருங்கி வந்தான். அவள் அவனை அடித்துத் துரத்துவதற்கு மாருகக் கனிந்த குரலில் ''ஐயோ அப்பாவிப் பிராணியே,'' என்று பரிவுடன் சொன்னுள்.

எழில்வரம்பன் சற்று நெஞ்சுரத்துடன் இன்னும் நெருங்கி வந்து தாழ்ந்த குரலில், ''அழகு மிக்க பெண் அணங்கே! பண்ணைக்காரன் மகளே! உனக்கு என்மீது அன்பு பிறக்குமா? சொல்லு!,'' என்று வேண்டினுன். அதற்கு அவள் ''அப்பாவி மிருகமே! அன்பு பிறக்கத் தடை என்ன?'' என்ருள். இந்த விடையைக் கேட்டு எழில்வரம்பனுக்கு மேலும் ஊக்கம் உண்டாகிவிட்டது. ஏதோ வாய்த் தடுமாற்றத்துடன், துணிந்து, ''பண்ணைக்காரன் ஆசைப்பெண்ணே! என்னைக் கலியாணன் பண்ணிக்கொள்வாயா?'' என்று கேட்டுவிட்டான். ''அதற்கென்ன; பண்ணிக் கொள்ளுகிறேன்,'' என்று, அவளும் விடை சொன்னுள்.

உடனே இளவரசனுன பன்றிக்குத் தன் உணர்ச்சிப் பெருக்கை அடக்கவே முடியவில்லை; மணப்பெண்ணை அழைத்துக்கொண்டு அரண்மனை சென்ருன். மிகவும் சிறப்பாக அவர்களது திருமணவிழா நடந்தேறியது.

எழில்வரம்பன் தன் புதுப்பெண்ணுடன் தனியாய் ஓர் அறையில் விடப்பட்டதும், அவனது முந்திய பேரெழில் வடிவம் மீண்டும் தோன்றிவிட்டது. கிளிமொழியின் காதும் மனமும் குளிரும்படி அவன் அவளுக்கு விவரத்தை எடுத்துச்சொன்னுன். ''இன்னும் மூன்றுமாதம், மூன்றுவாரம், மூன்றுநாள், மூன்றுமணி நேரம் வரையில் இதைப்பற்றி வேறு யாருக்கும் ஒன்றும்

தெரியாதபடி இருந்து, உன்னைத் தவிர வேறு யாரும் என்னைப்பார்க்க முடியாதிருந்தால், நான் இனி எப்போதும் இந்த அழகு உருவத்துடன் இருப்பேன்,'' என்று மேலும் சொன்னான்.

"கேட்பானேன்; நான் இதுபற்றி ஒரு காக்காய்க் குஞ்சிடம்கூட வாய்திறந்து ஒன்றும் சொல்லமாட்டேன்,'' என்று கிளிமொழி உறுதி கூறினாள். இரண்டு மாதம் இப்படியே மகிழ்ச்சியாகக் காலம் கழிந்தது. இதற்கிடையில் சுற்றியுள்ளவர்களுக்கெல்லாம் கிளிமொழியைப் பற்றி ஒரு பக்கம் பொறாமையும், ஒரு பக்கம் ஐயமும் ஏற்பட்டது. அவள் அவ்வளவு தூரம் மன மகிழ்ச்சியுடனும், உடல் பூரிப்புடனும், பொலிவுற்று விளங்கினாள். தன் கணவன் மீது அதிக அன்பு செலுத்துவளாகவும் தெரிந்தது. "ஒன்றில் தான் ஒரு இளவரசியாகுவதற்காக மட்டிலும்தான் அவள் அவனைக் கலியாணம் செய்து கொண்டிருக்கவேண்டும்; அல்லது அதில் ஏதோ ஓர் இரகசியம் இருக்கவேண்டும். பன்றி எப்போதும் பன்றியாக இருக்காது போலும்!'' என்று எல்லோரும் ஒளித்து ஒளித்துப் பேசிக்கொண்டனர்.

இந்தப் பேச்செல்லாம் ராணியின் காதுக்கு எட்டத்தான் செய்தது. அவளுக்கு ஏற்கனவே ஐயப்பாடு உண்டு. மேலும், பொறாமையும் உண்டாகிவிட்டது, தனக்குத் தெரியாத இரகசியம் தன் மருமகளுக்கு மட்டும் எப்படித் தெரியலாம் என்பதுதான் அதற்குக் காரணம். எனவே, அவள் தன்னிடம் உள்ளதைக் கூறும்படி கிளிமொழியை இடைவிடாது நச்சரித்து வந்தாள், ஒருநாள் அவளுக்கும், அவள் மருமகளுக்கும் இடையே உரையாடல் நிகழ்ந்தது.

ராணி : பண்ணைக்காரன் மகளே! நீ என் மகனை ஏன் கலியாணம் செய்து கொண்டாய்?

கிளிமொழி : அவரிடம் நான் அன்பு கொண்டதினால்....

ராணி : ஏதோ என் மகன் சில சமயங்களில் அழகிய உருவத்தோடு இருப்பான் என்று கேள்விப்படுகிறேனே, அது உண்மையா?

கிளிமொழி : உண்மையாயும் இருக்கலாம்; பொய்யாகவும் இருக்கலாம்.

ராணி : என்மகன் உன்னோடு தனிமையில் இருக்கையில் அவன் எப்படி இருப்பான்?

கிளிமொழி : அதை நான் சொல்ல முடியாது.

இதைக் கேட்டதும் ராணிக்கு ஆத்திரம் அதிகமாகி விட்டது. பின்பு ராணி கிளிமொழியை நோக்கி, "என் மகன் தூங்கும்போது நான் அவனைப் பார்த்துவிடுகிறேன்," என்று சினந்து கூறினாள். ஆனால், கிளிமொழி, "நீங்கள் அப்படிச் செய்யக்கூடாது," என வேண்டினாள். இதைப் பொருட்படுத்தாமல், ராணி, "சீ சிறுக்கி! நீயா எனக்குக் கட்டளையிடுவது? நான் யாரென்பதை மறந்தா பேசுகிறாய். நான் இவ்வூர் அரசி. எப்போது என் மகனைப் பார்க்க நினைக்கிறேனோ அப்போது பார்ப்பேன். உன் அனுமதி தேவையில்லை. நான் இடுவதுதான் கட்டளை. இன்னும் மிஞ்சிப் பேசினால் உன் மண்டுத் தலையை வெட்டிவிடுவேன்," என்று கண்டிப்பாகக் கூறினாள்.

கிளிமொழி, "பிறகு உங்கள்விருப்பம் அம்மா," என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

இப்படியாக, அன்றிரவு எழில்வரம்பன் தூங்கிய பின் கிளிமொழி ராணி உள்ளே வருவதற்குக் கதவைத்

திறந்து கொடுத்தாள். தன் மகன் அழகான உருவத்துடன் இருப்பதைக் கண்ட அரசி, "அப்பா என் மகனே எவ்வளவு அழகாய் இருக்கிறுய்," என்று உரக்கக் கத்தி விட்டாள். உடனே அவன் ஒரு பறவையாக மாறிவிட்



எழில்வரம்பன் தங்கவால் பறவையாக மாறிப் பறந்துசெல்லுதல்

டான். அப்பறவையின் வால் முழுவதும் தங்கமயமாக இருந்தது. சன்னல் வெளியே அப்பறவை பறந்து சென்றுவிட்டது. போகும்போது கிளிமொழியிடம்,

"என்னை நீ தேடிக் கண்டுபிடிக்க வேண்டுமானல் நீ ஏழு வருடம் அலைந்து திரிய வேண்டும்; ஏழு சோடி இரும்புச் செருப்பைப் போட்டுத் தேயவைக்க வேண்டும் ; ஏழு குடம் நிரம்ப உன் கண்ணீர் நிறைய வேண்டும். அப்படியானல் நான் மீண்டும் உனக்குக் கிடைப்பேன்," என்று கூறிவிட்டுச் சென்றது.

வானத்தில் தங்க ஒளி மின்னும்படி அப்பறவை எங்கேயோ பறந்துவிட்டது.

தன் ஆருயிர்க் கணவன் இவ்வாறு மறைந்து சென்றதைப் பொருமல், கிளிமொழி விம்மி விம்மி அழுதாள். அவள் நெஞ்சு வெடித்து விடும்போல் இருந்தது. ஆயினும் பறவையாகப் பறந்து போகும்போது இறுதியில் கூறிய சொற்கள் அவள் நினைவிற்கு வந்தன. உடனே சென்று தனக்கு ஏழுசோடி இரும்புச் செருப்புகளை வாங்கிக் கொண்டாள். ஊன்றி நடப்பதற்கு ஏழு கம்பிகளையும் வாங்கினுள். தன் துன்ப நிலையை நினைத்து வருந்திக் கொண்டே தனது கணவனை நாடிப் புறப்பட்டாள். மாதக் கணக்கில் இவ்வாறு நடந்தாள். கல்லும், முள்ளும், காடும் கரடும், மலையும் பள்ளமும் பாராமல் சென்ருள். மேலெல்லாம் முட்புதர்கள் கிழித்துக் காயப்படுத்தின. திசை தெரியாத தேசங்களுக்கெல்லாம் சென்ருள். போகுமிடம் எல்லாம் முகம் தெரியாத ஆட்களிடம்கூட, "தங்க வால் முளைத்த பறவை ஒன்றைக் கண்டதுண்டா?" என்று அவள் வினவினுள். அந்த விந்தைப் பறவையை யார் பார்த்திருக்கிருர்கள் ? கேட்டவர்கள் எல்லாம், "இல்லை," என்றே கூறினுர்கள்.

இப்படியாக ஏழு வருடங்கள் நடந்து, தன் காலில் உள்ள செருப்பைத் தவிர மீதிச் செருப்பெல்லாம்

தேய்ந்து அவள் அழுத கண்ணீர் ஏழு குடங்களிலும் நிறைந்தபின், இனி அவள் கண்ணில் ஒரு துளிகூடக் கண்ணீரே இல்லை என்று ஆனபின்பு, ஒருநாள் அவள்



பூதகக் கிழவியுடன் கிளிமொழி பேசுதல்

ஓர் இருண்ட காட்டை அடைந்தாள். அங்கே இருண்ட ஒரு மூலையில் ஒரு விடு இருந்ததை அவள் கண்டாள். நரைத்துத் திரைத்துக் கூனிக்குறுகியிருந்த ஒரு கிழவி

அவ் வீட்டின் சன்னல் பக்கத்தில் இருந்ததைப் பார்த்தாள். "ஆச்சி ஆச்சி, தங்கவால் முளைத்த பறவையை நீ பார்த்தாயா?" என்று அவள் கேட்டாள்.

"அம்மா குழந்தாய், நான் அதைப் பார்த்ததில்லை. என் கணவன் ஒருவேளை பார்த்திருப்பார். ஆனால், அவர் வருவதற்குள் நீ ஓடிவிடு. அவர் ஒரு பூதகன். இது பூதகர்கள் வாழும் நாடு. உன்னை அவர் கண்டால் உயிரோடு தின்றுவிடுவார்," என்றாள் அக்கிழவி.

"பூதகி ஆச்சி! நீ என்னைப் போகச் சொல்லாதே. என்னை உன் வீட்டில் ஒளித்து வைத்துவிடு. ஒருவேளை உன் கணவன் என் தங்கவால் பறவை எங்கிருக்கிறது என்பதுபற்றி ஏதாவது சொல்லக்கூடும். நான் அதைத் தெரிந்து கொள்ளலாம். மேலும் நான் மிகவும் களைத்துப் போயிருக்கிறேன். இன்று இரவில் நான் எங்காவது தங்கித்தான் போகவேண்டும்," என்றாள் கிளிமொழி.

முதலில் அப்பூதகி அவளை வீட்டில் வரவிடவில்லை. தன் கணவன் வந்தால், கண்டிப்பாய் அவளைப் பிடித்துத் தின்றுவிடுவான் என்பது அவளுக்கு உறுதியாகத் தெரியும். சின்னஞ் சிறுபெண் இப்படி அலைவதைப் பார்த்தால், மிகவும் இரக்கமாகவும் இருந்தது. சிறிது நேரம் கிளிமொழி வாதாடிய பிறகு அவளைக் கிழவி உள்ளே அழைத்து வந்து, ஒன்றுமில்லாத வெறும் பீப்பாய் ஒன்றினுள் ஒளித்து வைத்தாள்.

சிறிது நேரத்தில் பூதகன் வீட்டுக்கு வந்தான், வரும்போதே, "ஆள் மணம் அடிக்கிறதே," யார் இருக்கிறார்கள் என்று கேட்டுக்கொண்டே அங்குமிங்கும் பார்வையைச் செலுத்திக்கொண்டு வந்தான்.

"வயது ஆக ஆக மூளையும் மழுங்கித்தான் போகிறது உமக்கு. இங்கு ஏது ஆள்? ஆனால், இன்று காலையில் ஓர் இளம் பெண் வந்தாள். 'தங்கவால் முளைத்த பறவை எங்கே தெரியுமா?' என்று கேட்டாள்," என்று கிழவி தந்திரமாகப் பதில் சொன்னாள்.

"தங்கவால் பறவையைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது. ஆனால், இந்த வீட்டில் ஆள் இருப்பது நன்றாகத் தெரிகிறது. எனக்கு நல்ல வேட்டைதான் என்று சொல்லித் தன் இடுப்பில் செருகியிருந்த ஊது குழலை எடுத்து மாயமான பாட்டொன்றை வாசித்தான். பாட்டுத் தொடங்கியதும் வீட்டில் உள்ள ஒவ்வொரு சாமானும் மூலைக்கொன்றாய்க் கிளம்பிக் குதித்தன. அப்பாவி இளிமொழிக்கு பீப்பாய்க்குள் அங்குமிங்கும் அடிபட்டு உடம்பெல்லாம் புண்ணாய் வலித்தது. ஆயினும், அவள், கீச்சு என்றுகூடக் கத்தவில்லை. தின்பதற்கு ஒன்றும் கிடைக்க வழியில்லை என்பதைக் கண்டுகொண்ட பூதகன் பசியும் கோபமுமாக முணுமுணுத்துக் கொண்டே படுத்துத் தூங்கி மறுநாள் காலையில் எழுந்து வேட்டைக்குப் போய்விட்டான். அவன் போனபின் கிழவி வந்து கிளிமொழியை வெளியே எடுத்துவிட்டு, "ஐயோ அம்மா! நீ நேற்றெல்லாம் என்ன பாடுபட்டாய்? உனக்கு உன் பறவையைப் பற்றித் தகவல் கிடைக்கவில்லையே. இந்த வேர்க்கடலையை வைத்துக்கொள். உனக்கு வேண்டியிருந்தால் அதை உடைத்துப் பார்," என்று சொல்லி அனுப்பினாள்.

மீண்டும் கிளிமொழி தன்வழியே நடந்து காடெல்லாம் சுற்றினாள்; அன்று இரவு மரங்கள் நெருங்கி இருந்த ஓர் அடவியில் மற்றொரு வீடு தென்பட்டது.

கதவைத் தட்டித் தனக்குத் தங்கிச்செல்ல இடமளிக்கும் படி கேட்டாள்.

''அம்மா, பெண்ணே! சற்றும் சுணங்காமல் ஓடிவிடு. இங்கே நிற்காதே,'' என்று கதவைத் திறக்கவந்த கிழவி கூறினுள். மேலும், ''இது பூதகர் வாழும் காடு என்று உனக்குத் தெரியாதா? கடாவிழுங்கி இப்போது வந்து விடுவான். உன்னைக் கண்டால் உடனே தூக்கி அப் படியே தின்றுவிடுவான். போய்விடு,'' என்றாள்.

''அன்புள்ள பூதகிப்பாட்டி! நான் தங்கவால் பறவையைத் தேடி வருகிறேன்; உன் கணவன் உண் மையிலேயே பூதகன் ஆனுல், அவனுக்கு இப்பறவை இருக்குமிடம் தெரியக்கூடும். என்னை உன் வீட்டுக்குள் வர வழி விடு. நான் அந்த இரகசியத்தைத் தெரிந்து கொள்வதற்கு வழிபிறக்கும்,'' என்றாள்.

இளமனம் படைத்த அப்பூதகியும் கடைசியில் அரைகுறை மனதுடன் அவளை உள்ளே அழைத்துக் கொண்டாள். பூதகி அவளைத் தன் வெற்றிலைப் பெட்டி யில் ஒளித்து வைத்துவிட்டாள். சற்று நேரத்தில் கடாவிழுங்கிப் பூதகன் வீட்டுக்கு வந்தான். வரும்போதே முகத்தை அங்குமிங்கும் திருப்பி மோப்பம் பார்த்துக் கொண்டே வந்தான். ''ஏதோ ஆள் மணம் வீசுகிறதே,'' என்று தன் பெண்டாட்டியிடம் கேட்டான்.

''என்ன பைத்தியமா உங்களுக்கு? இங்கு ஆளு மில்லை கிளுமில்லை. ஆனுல், இன்று காலையில் ஒரு பெண் வந்தாள். என்னவோ தங்கவால் பறவையாமே; 'அது எங்கே தெரியுமா?' என்று கேட்டாள்,'' என்று மழுப்ப லாய்ப் பேசினுள்.

"எனக்குத் தங்கவால் பறவையைப் பற்றி ஒன்றும் தெரியாது," என்று இடிமுழக்கம்போல் இரைந்து சொன்னான். "ஆனால், இங்கு ஏதேனும் ஆளைக் கிளைக் கண்டேனே, உன்னை அப்படியே கண்டதுண்டமாய் வெட்டிவிடுவேன்," என்றான். இப்படிக் கூறிவிட்டுத் தன் இடுப்பில் இருந்த குழலை எடுத்து ஊதினான். வீட்டில் உள்ள எல்லா சாமான்களும் மேலும் கீழும், நாலா பக்கமும் தாவிக் குதித்தன. மாடக்குழியில் வைத்திருந்த வெற்றிலைப்பெட்டி கூரை உத்தரத்தில் சென்று இடித்தது. பிறகு தொப்பென்று தரையில் விழுந்தது. உள்ளுக்குள் ஒளிந்திருந்த கிளிமொழி தனக்கு இன்றோடு முடிவுகாலம்தான் என்று நினைத்துவிட்டாள். அவள் உடல் மேலே சென்று மோதி விழுந்ததால், அவளுக்கு அவ்வளவு வேதனையாக இருந்தது. உயிர்போகும் இந்த நிலையிலும்கூடத், "தங்கவால் பறவையைப்பற்றி ஒன்றும் தெரியாமலே சாகிறோமே," என்று அவள் கவலைப்பட்டாள்.

மறுநாள் காலையில் கடாவிழுங்கி வெளியே போன பின் பூதகி அவளை வெளியே எடுத்துவிட்டு, "அம்மா போய்விடு; உனக்கு ஏதாவது வேண்டியிருந்தால், இந்த முந்திரிக்கொட்டையை உடைத்துப் பார்," என்று சொல்லி அனுப்பினாள். பண்ணைக்காரனின் ஏழைப் பெண் மனஞ்சோர்ந்து மெள்ள மெள்ள வெளியே நடந்து சென்றாள். மனமும் உடலும் புண்ணாக அலைந்து வாடினாள். ஆயினும் அவள் களைப்பாற மனங்கொள்ளவில்லை. தங்கவால் பறவையைக் காணும் முயற்சியில் தொடர்ந்து முனைந்தாள். கால்கடுக்க நடந்து அன்று மாலையில் அக்காட்டின் கடைசி ஓரத்தில் இருந்த ஒரு வீட்டண்டை வந்தாள். வீட்டு வாயிலில் கடுகடுத்த

முகத்துடன் ஒரு கோரக்கிழவி நின்றுகொண்டிருந்தாள். இவளைக் கண்டதுமே கிழவி சீறிச் சினந்து விரட்டினாள். "ஓடிப்போ சிறுக்கி. இங்கே ஏன் வருகிறாய்? போ, போ. போகாவிட்டால், உன் மண்டையைக் குழைத்து விடுவேன்," என்றாள்.

"அம்மா! அம்மா! கோபிக்காதே. தங்கவால் பறவையை நீங்களாவது பார்த்ததுண்டா?" என்று கெஞ்சிக் கேட்டாள் கிளிமொழி.

"சீ, போ! நீயும் உன் இரும்புச் செருப்பும் நாசமாய்ப் போக! தங்கவால் பறவையையும் பார்க்கவில்லை; வெள்ளிக்கால் பறவையையும் பார்க்கவில்லை. என் கணவர் பார்த்திருப்பார். அவருக்குத் தெரியாதது ஒன்றும் கிடையாது. மலைவிழுங்கிப் பூதகன் என்றால், எல்லாருக்கும் தெரியுமே. உனக்குத் தெரியாதா? உன்னைப் பார்த்து விட்டாரானால் போதும். அப்படியே இரும்புச் செருப்பும் கம்பியும் சேர்த்துத்தின்று விடுவார். வயமாக வந்து மாட்டிக்கொண்டாய் நீ," என்று அலறினாள் கிழவி.

"கொஞ்சம் இரக்கம் வை அம்மா! இன்றிரவு உன் வீட்டில் தங்கிச் செல்கிறேன். ஏதோ அந்த இரகசியம் தெரிந்துகொண்டால் போதும். என்ன ஆபத்து வந்தாலும் பரவாயில்லை. அம்மா! கொஞ்சம் தயவு செய்யுங்கள்," என்று கிளிமொழி இரங்கினாள்.

"சரி! எனக்கென்ன? நீ சாகத் துணிந்திருந்தால் சரிதான்; நானா வேண்டாமென்கிறேன்," என்று சற்றுத் தணிந்த குரலில் கூறி, அவளை உள்ளே அழைத்து திரிகையும் உரலும் வைத்திருக்கும் இடத்தில் உமிச் சாக்குக்குள் ஒளிந்திருக்கும்படி கூறினாள்.

பொழுதடையும்போது மலைவிழுங்கிப் பூதகன் வெகு பசியோடு வீட்டுக்கு வந்தான். வாசலை மிதித்த துமே, அவனுக்கு மூக்கு வேர்த்தது. நாலு பக்கமும் மோப்பம் பிடித்தான். "வாய்க்கு ருசியாய் ஏதோ இளமையான ஆள் இறைச்சி வாசனை தெரிகிறதே கொண்டா இங்கே," என்று உரக்கக் கத்தினன்.

"ஆமாம், ஆமாம். ஊரிலில்லாத சரக்கை உங்களுக் குத் தெரியாமல் ஒளித்து வைத்திருக்கிறேன். பசி எடுத்தால், இப்படி எல்லாம் சொல்லச் சொல்லுதோ? அதுசரி; தங்கவால் பறவை எங்கே இருக்கிறது ?" என்று தந்திரமாகக் கேட்டாள் கிழவி.

"எனக்கென்ன தெரியும் தங்கவால் பறவையைப் பற்றி. நான் என்ன காற்று அரசனு? அதிருக்கட்டும். பிஞ்சு இறைச்சியை எங்கே ஒளித்துவைத்திருக்கிருய்? சொல்," என்ருன்.

அவன் கேட்டதற்கு பதில் சொல்லாமல் அவள் அவனைப் போக்குக் காட்டி வேறு ஏதேதோ சொல்லி வரவே, அவன் தன் இடுப்பிலுள்ள குழலை எடுத்து பூதகர்கள் வழக்கமாய்ப் பாடும் பாட்டைப் பாடினன். வீட்டில் உள்ள சாமானெல்லாம் துள்ளிக் குதித்தன, உரலும் உலக்கையும், அம்மியும் ஆட்டுக்கல்லும் கூத்தா டிக் குதித்தன. பாவம் கிழட்டுப் பூதகியும் மேலே முகடு வரையில் தூக்கி எறியப்பட்டாள்.

உமிச்சாக்கில் ஒளிந்திருந்த கிளிமொழியோ, உலக் கைக்கும் உரலுக்கும் இடையில் மோதி மொத்துண்டு உடலெல்லாம் இரத்தக் கறையாகி, போதும் போதும் என்ற நிலைக்கு வந்து விட்டாள். ஆனுல், ஏதோ அவள் செய்த புண்ணியம் மலைவிழுங்கி கண்ணில் மட்டும் பட

வில்லை. அவனும் பாடிப்பாடி அலுத்து ஓய்ந்து விட்டான். வேட்டை கிட்டாத கரடிபோல் உறுமிக் கொண்டே படுத்து உறங்கிவிட்டான்.

மறுநாள் காலையில் பூதகன் போனதும் கிழவி வந்து, "அம்மா அவர் வெளியே போயிருக்கிருர். இப்போதே ஓடிவிடு. உன் பறவையைப்பற்றிப் பூதகர்களுக்கு ஒன்றும் தெரியாது. காற்று அரசனுக்குத்தான் தெரியும்," என்று சொன்னுள்.

"நல்லது அம்மா," என்று கிளிமொழி பொங்கும் மகிழ்ச்சியோடு கூறினுள். "ஆனுல், அக்காற்று அரசன் எங்கே இருக்கிருன்? தயவுசெய்து சொல்லம்மா," என்று மேலும் கேட்டாள்.

"அதோ தொலைவில் சாலை தெரிகிறதே, அந்தப் பக்கத்தில்தான் காற்றுக் குடியிருப்பு இருக்கிறது. அங்கே போய்ப்பார். இனி இங்கே நிற்காதே. உன்னுல் எனக்கும் ஏதேனும் தீங்கு வந்துவிடப் போகிறது. போய்விடு. இந்தா; உனக்கு ஒரு வாதாங்கொட்டை தருகிறேன். வைத்துக்கொள். ஏதாவது வேண்டுமானுல் அதை உடைத்துப்பார்," என்று கிழவி சொல்லி அனுப்பினுள்.

பண்ணைக்காரன் மகள் கிழவிக்கு மனமார நன்றி சொன்னுள். கடுகடுத்த முகமும் சொல்லும் இருந்தாலும், கிழவி உள்ளுக்குள் இரக்கத்துடனேயே உதவி செய்திருக்கிருள். பின்பு, காற்று அரசனைத் தேடிக் கிளிமொழி விரைந்து நடந்தாள். முள்ளும் புதரும் வழியைத் தடை செய்தன. இருண்ட காடும், அடர்ந்த அடவியும் தாண்டி வெகு வேகமாக நடந்தாள். எத்தனையோ பயங்கரமான பூச்சியும் அட்டையும், புழு

வும் பூரமும் நெளிந்து சென்றன. சேற்றிலும் சகதியிலும் இறங்கி, ஆற்றிலும் ஓடையிலும் நீந்திக் கடக்க வேண்டியிருந்தது. ஆனால், அவள் எல்லா இன்னல்களையும் தாங்கிக்கொண்டு ஒரு வழியாய் மலையடிவாரத்துக்கு வந்தாள். அம் மலைமேல்தான் காற்றுக்களின் ஊர் இருந்தது.

அங்கே சற்று இளைப்பாறி, மூச்சு வாங்கிக்கொண்டு, பிறகு செங்குத்தான அம் மலைமீது ஏறத்தொடங்கினாள். மலை உச்சிக்கு வந்ததும், அகல வாய் திறந்து நின்ற கோட்டைவாயில் ஒன்று அங்கிருப்பதைப் பார்த்தாள். அதன்முன் வந்ததும் அங்கு வீசிய ஒரு பெருங்காற்று அவளை அப்படியே தூக்கி எடுத்து ஒரு பெரிய கூடத்தில் கொண்டு விட்டுவிட்டது.

"அன்புள்ள காற்றே, தங்கவால் பறவை எங்கே இருக்கிறது? சொல்வாயா?," என்று கிளிமொழி தன்னை வாரி எடுத்து வந்த காற்றிடம் கெஞ்சிக் கேட்டாள்.

"அருமைக் குழந்தாய்! எனக்கு அது தெரியாது; என் அண்ணன் வாடைக் காற்று வருவான். அவனிடம் கேள்," என்று சொல்லிவிட்டு மறு திசையில் வீசிச் சென்றுவிட்டது.

தன்னை ஏதோ ஒன்று சுவரோடு அமுக்கி வைப்பது போல் கிளிமொழிக்குத் தெரிந்தது. உடலும் நடுங்கியது. குளிர்ந்த வாடைக் காற்றுத்தான் வீசுகிறது என்று அவள் உணர்ந்தாள். வாடைக் காற்றிடம் தங்கவால் பறவையைப்பற்றிக் கிளிமொழி கேட்டாள். "தனக்கொன்றும் தெரியாது; தன் தமையன் கொண்டல் காற்று கிழக்கிலிருந்து வருவான் அவனுக்குத் தெரியக்கூடும்," என்று சொல்லிச் சென்றுவிட்டது. ஆனால், கொண்டல்

வீசியபோது கேட்டதற்கு அந்தக் கீழ்காற்று, "எனக்கும் தெரியாது; எல்லோருக்கும் மூத்த கச்சான் காற்றிடம் கேள். அவன் மேற்கே இருந்து இப்போது வருவான்," என்று சொல்லிப் பாய்ந்தோடிவிட்டது. மூன்று திசையிலும் இப்படி மாறிமாறி மொத்துண்ட கிளிமொழி மேல்காற்றின் வரவை எதிர்நோக்கி நின்றாள். மேற்கு மலையிலிருந்து முழு வேகத்துடன் கச்சான் காற்று வீசியது. ஓங்கி வீசும் அக் காற்றில் தன் கை கால் எல்லாம் பிய்த்துக் கொள்ளுமோ என்று கிளிமொழி அஞ்சினாள். ஆயினும் துணிந்து நின்று, "அன்பு நிறைந்த மேல் காற்றே! நால்வருக்கும் மூத்த கச்சானே! சொல்லாா தங்கவால் பறவை எங்கே இருக்கிறது?" என்றும். கேட்டாள்.

"தங்கவால் பறவை இங்கிருந்து ஏழாயிரம் மைலுக்கு அப்பால் இருக்கிறது. எனக்கு அது இருக்குமிடம் தெரியத்தான் செய்யும். மேல் காற்றுக்குத் தெரியாததே ஒன்றுமில்லை. நீ பயப்படமாட்டாயானால், என் முதுகில் ஏறி உட்கார்; உன்னை அந்த இடத்தில் கொண்டு விடுகிறேன்," என்று கச்சான் காற்று சொல்லிற்று.

உடல் நடுங்கும்படி ஓங்கி வீசும் அக்காற்றின் முதுகில் ஏறிக்கொண்டு ஏழாயிரம் மைல் செல்வதற்குக் கிளிமொழிக்குப் பயமாகத்தான் இருந்தது. ஆனால், மறு சொல் சொல்லாமல் மனந்துணிந்து அதன் முதுகில் ஏறிக்கொண்டாள். இடிபோல் இரைந்து கொண்டு மின்னல் வேகத்தில் அது பாய்ந்து வீசியது.

ஒரு நொடியில் அது பொங்கும் அலைவீசும் கடல் மீது தாவியது. மறுநொடியில் வானத்தைத் தொடும் உச்சி மலைமீது தாவியது. அடுத்த நொடியில் படுபாதா

ளக் கெவியில் பாய்ந்து இறங்கியது. இப்படியே இங்குநி அங்கும் எங்குமாக நொடிக்கு நூறு மைல் வேகத்தில் கச்சான் பாய்ந்து சென்றது. அதன் முதுகிலிருந்த கிளி மொழி இக் காற்று வேகத்தில் தன் மேனி எல்லாம் கறுத்து வாடித் தனக்குக் கிழடு தட்டுவதை உணர்ந் தாள்.

"எவ்வளவு சோர்வும் களைப்பும்? எப்படி மூச்சுத் திணறுகிறது? நான் உயிர் பிழைப்பேனு?" என்று அவள் அஞ்சினுள். அவள் அப்படி நினைத்த நேரத்தில் காற்றின் வேகம் குறைந்தது. சிறிது நேரத்தில் அவளை அரு மாளிகையின் முன்னிருந்த பசும்புல் வெளியில் கச் சான் காற்று இறக்கிவிட்டது.

"அதோ தெரிகிறதே மாளிகை. அதில்தான் உன் தங்கவால் பறவை இருக்கிறது. ஆனுல், இன்றிலிருந்து அது பறவையல்ல. அழகான இளவரசனுகிவிட்டது. என்னுல் முடிந்ததைச் செய்துவிட்டேன். உன் முயற்சி வெற்றி பெறுக. நான் போய் வருகிறேன்," என்று சொல்லிவிட்டுக் காற்றுக்கரசனுன மேல் காற்றுப் போய் விட்டது.


சிறிது நின்று மூச்சு வாங்கிக் கொண்டதும் பண் ணைக்காரனின் மகள், மெள்ள மெள்ள அம்மாளிகைப் பக்கத்திலிருந்த களத்துமேட்டுக் குடிசை அருகில் சென் ருள். மாளிகை முன் செல்வதற்கு அவளுக்குத் துணிவு இல்லை. குடிசையை நெருங்கியதும், "பாட்டியம்மா உனக்கு என்ன வேண்டும்," என்று யாரோ கேட்ட குரல் அவள் காதில் விழுந்தது.

பாட்டியம்மாவா! ஆம். கிளிமொழி இத்தனை வருடமாகப் பட்டபாட்டிற்குப்பின் படுகிழமாகி விட்

வீருந்தாள். அழகு பொலியும் இளவரசன் எழில்வரம் பன் முன் இக்கிழட்டு உருவத்தில் தான் எப்படிப் போய் நிற்பது? ஏழு வருடத்துக்கு முன் தான் அவனது அன் பிற்குரிய புது மனைவியாக இருந்ததை அவன் எப்படி உணர்வான்? தன்னை வெளியே துரத்தி விடுவானே. இதை எண்ணும்போதே அவள் கண்ணில் நீர் நிறைந்து விட்டது. இருந்தாலும் உள்ளத்தை உறுதியாக்கிக் கொண்டு தன்னிடம் பேசிய பண்ணையாளிடம், "ஐயா குடியானவரே, எனக்கு ஏதேனும் ஒரு வேலை வேண் டும்," என்று வேண்டிக் கொண்டாள்.

"சரி அம்மா. இங்கு வாத்து மேய்த்து வந்த பெண் இறந்துவிட்டாள். அந்த வேலையை நீ பார்க்கலாம். உனக்கு அது கடினமாக இராது," என்முன் அந்தக்குடி யானவன்.

கிளிமொழி வாத்துக்களை மேய்த்துக்கொண்டு மலை ஓடைப் பக்கமாகச் சென்றுள். தெளிந்த நீரில் தன் நிழலைப் பார்த்ததும் அவள் திடுக்கிட்டாள். தன் முக மெல்லாம் கறுத்து, தோல் சுருக்கம் விழுந்து இருப்பதை யும், தன் உடை கிழிந்து கந்தல் கந்தலாக இருப்பதையும், முதுகு சற்றுக் கூனலாகி இருப்பதையும் கண்டு அப் படியே மனம் இடிந்து போனுள். "நான் என்ன பாடு பட்டு எதற்கு? நான் என் அன்பிற்குரிய எழில்வரம்பனை நேரில் காண நேர்ந்தாலும் அவர் என்னை யார் என்று தெரிந்து கொள்ளமாட்டாரே. அவரை நான் முதலில் கண்ட காலத்தில் இருந்ததுபோல் வெறும் பன்றியாக இருந்தாலும் நான் இவ்வாறு விகாரக் கிழவியாயிருப் பதில் குற்றமில்லை. ஆனுல், அவரோ இப்போது பேருக்கு ஏற்ப எழில்மிக்க இளவரசனுக விளங்குவார். என்னை



கிளிமொழி வாத்துக்களை மேய்த்தல்

ஏறிட்டுக்கூடப் பார்க்கமாட்டார்!" என்று துன்பம் நிறைந்த நிலையில் தானாகவே கூறிக் கொண்டாள்.

அவள் இதைச் சொல்லியதும் வாத்துக்கள் பேசத் தொடங்கிவிட்டன. "எங்கே அந்த வேர்க்கடலை," என்று வினவின.

கிளிமொழி உடனே முதலில் கண்ட பூதகி தந்த வேர்க்கடலையை உடைத்தாள். அதிலிருந்து தெய்வ மகளிர் உடுத்தத்தக்க அரிய உடை வெளியே வந்தது. மென்மை மிகுந்த பட்டிலும் குழைவு மிக்கதாய், நீராவிப் படலம்போல் நிறம் உடையதாய், பொன் சரட்டில் மணிகள் கோத்துப் பதித்த கரைகள் உள்ளதாய் அப்புடவை கண்ணைப் பறிக்கும் அழகுடன் விளங்கியது. உடனே அவள் அதை அணிந்து கொண்டாள். என்ன விந்தை! அவளது நரையும் திரையும் மாயமாய் மறைந்து விட்டன. கண்கள் நீல மணிபோல் சுடர்விட்டன. கூந்தல் பட்டிலும் மென்மை மிகுந்து தோகைபோல் அடர்ந்து தொங்கியது. அவள் ஒப்பற்ற அழகு உருவம் பெற்று விட்டாள். எழில்வரம்பன் அவளை முதன் முதலாகப் பார்த்தபோது இருந்ததைப்போல் பல்லாயிரம் மடங்கு அழகு சிறந்து நின்ருள்.

இதை அவ் வாத்துக்கள் பார்த்ததும், "ஆகா நம் தலைவி எவ்வளவு எழிலுடன் விளங்குகிருள். என்ன அழகு! என்ன அழகு!" என்று பாராட்டின.

வாத்துக்கள் இவ்வாறு இரைந்த ஓசை கேட்டு அம் மாளிகையில் வாழும் கிழ அரசி வெளியே வந்தாள். எழில்வரம்பன் தன்னை மணந்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்திக் கட்டுப்பாடு செய்து கொண்டிருந்த அரசி அவள்தான். எழில்வரம்பனே அவளைக் கண்டிப்

பாகத் தான் மணம் செய்ய முடியாது என்று கூறி மறுத்துவிட்டான். அவள் கிழவியாகவும், கொடியவளாகவும் இருந்தது ஒரு காரணம். தனது அன்புக்குரிய கிளிமொழி தன்னைத் தேடி எப்படியாவது வந்துவிடுவாள் என்ற நம்பிக்கை மற்ருெரு காரணம். எனவே, மலைமுடியாள் எனும் அவ்வரசி எழில்வரம்பனைத் தன் மாளிகையில் சிறைவைத்துக் காப்பாற்றினுள். வெளியே செல்ல விடுவதில்லை. மலைமுடியாள் இம்மாயமான அழகுப் புடவையைக் கண்டதும் அதை அடைய ஆசை கொண்டாள். அவள் குரூபியாக இருந்ததோடுகூட வீண் பெருமை கொண்டவளாகவும் இருந்தாள்.

"இன்றிரவு என்னை இளவரசன் இருக்கும் அறையில் தங்குவதற்கு நீ இணங்கினுல் இந்த அழகிய புடவையை உனக்குத் தந்துவிடுகிறேன்," என்று கிளிமொழி அரசியிடம் சொன்னுள்.

"சரி, கோழி கூவும் வரையில் நீ இருக்கலாம்," என்று சொல்லிவிட்டு மலைமுடியாள் அந்தப் புடவையை வாங்கிக் கொண்டு போய்விட்டாள். ஆனுல், அன்று மாலையில் இளவரசனுக்கு அளித்த பாலில் தூக்க மருந்தையும் கலந்து கொடுத்துவிட்டாள். எனவே, இளவரசன் உணவருந்தியதும் உறங்கி விட்டான். அவனைப் பள்ளி மஞ்சத்துக்குத் தான் எடுத்துச் செல்லவேண்டியதாக இருந்தது. சற்றுநேரம் கழிந்ததும் கிளிமொழி அங்கு வந்து அவன் தூக்கத்தைப் பார்த்து அழுது கொண்டே பின்வருமாறு கூறினுள்: "என் அன்பே! உங்களைக் காண்பதற்காக நான் இரும்பாலான ஏழு சோடி செருப்பும் தேய நடந்துவந்தேன். வார்த்து உருக்கிய இரும்புக் கம்பிகள் ஏழும் நான் ஊன்றி நடந்த

தால் தேய்ந்துவிட்டன. உள்ளம் வெதும்ப் கண்சோர விட்ட கண்ணீர் ஏழு குடமும் நிறை டது. ஏழுவருடம் நான் இவ்வாறு துயருற்று உ தேடிக் காண வந்தேனே. இப்போதோ த அரச என்னைக் கண்பாராமல் இப்படித் தூங்குகிறீர்களே? து என்னைத் தேற்ற வழியில்லையா?" என்று இரவு முழுதும் கூவி அரற்றினாள். ஆனால், தூக்க மருந்து வேகம் மிக்கது. எனவே, விடியும் வரையும் எழில்வரம்பன் கண் விழிக்கவே இல்லை. கோழியும் கூவவே, கிளிமொழி வாத்து மேய்க்கப் போகவேண்டியவளானாள்.



கோழி கூவுவதைக் கிளிமொழி கவனித்தல்

அன்று பிற்பகலில் அவள் தன்னிடமிருந்த முந்திரிக் கொட்டையை உடைத்தாள். அப்போது அதிலிருந்து வெளிப்பட்ட புடவை முந்திய அதிசயப் புடவையைவிடப் பின்னும் அழகு மிக்கு விளங்கியது. அவள் அதை அணிந்து கொண்டதும், "நம் தலைவி இன்று இன்னும் எவ்வளவு எழிலுடன் விளங்குகிறாள். இதைப்போல் அழகை நாம் பார்த்ததே கிடையாதே. என்ன அழகு! என்ன அழகு!" என்று வாத்துக்கள் கத்தின. கிழ அரசி மலைமுடியாள்

பாகத் லவே ஒப்புக்கொண்டு அந்தப் புடவையைப் மறுத்துக்கொண்டாள். அன்றும் இளவரசனுக்குத் ளாகவும் ருந்திட்டு விட்டாள். கிளிமொழியின் அழுகை கிளிமொ ணிரும் அவள் கணவனை எழுப்பமுடியவில்லை. வா ழியும் கூவி விட்டது. கிளிமொழி மீண்டும் வாத்து மேய்க்கப் போகவேண்டியதாகிவிட்டது.

மறுநாள் அவள் தன்னிடமிருந்த கடைசிப் பரிசான வாதாங்கொட்டையை உடைத்தாள். ஆகா ! எவ்வளவு அழகான உடை, அன்று கிடைத்தது ! வானத்தின் நீல நிறத்தைத் திரட்டி வண்ணம் தீட்டியதாகத் திகழ்ந்த அந்த உடையில் நட்சத்திரங்களே பதித்தாற்போல் அதிலுள்ள பூக்கள் சுடர்விட்டன; கொடிகள் மின்னல் போல் ஒளி பரப்பின. அதை உடுத்திய கிளிமொழி அழகின் உருவமாய் நின்றாள். அன்றும் மலைமுடியாள் முன்போலவே ஒப்புக்கொண்டு அந்த அழகு உடையைத் தனக்கெனப் பெற்றுக்கொண்டாள். கிளிமொழி இது தான் தனது இறுதி வாய்ப்பு என்பதை உணர்ந்து உள்ளம் நடுங்கினாள். அன்றிரவிலும் தன் கணவனைத் துயிலுணர்த்த முடியாவிட்டால் தான் என்றுமே அவனை அடைய முடியாதே என்பதை எண்ணி அவள் நெஞ்சம் குமுறியது.

ஆனால், அன்று மாலை இளவரசன் சாப்பிட அமர்ந்ததும் தன் வேலையாளிடம், "ஏனப்பா இரண்டு நாளாய் இரவில் நான் சாப்பிட்டதுமே தூங்கிவிடுகிறேனே. என்ன சேதி?" என்று கேட்டான். "இளவரசே தாங்கள் குடிக்கும் பாலைக் கவனியுங்கள்," என்று குறிப்பாய்க் கூறினான் வேலையாள். மேலும், "கோமகனே ! இரண்டு இரவிலும் தங்கள் பள்ளியறையிலிருந்து அழு

குரல் கேட்கிறதே. யாரோ
வெளியே கேட்கிறது. உங்க அழகிகள்
என்று கேட்டான்.

பறகள் என்ற ஒரு அரச
"இதுவரையில் எனக்கு எல்லாம் அவன் மீது
ஆனல், இனி நான் கவனித்துக் ரன், என்றால், அவன்
இளவரசன் சொல்லிவிட்டான். ட்டுமின்றி, மிக அழ
யில் தனக்குத் தரப்பட்ட பாலே னப்போல் அகன்ற
நேரத்தில் கை கழுவும் தொட்டியி ரிய விழிகளும்
வழக்கம்போல் தூங்குவதாகப் பாவ முடியாது.
விட்டான்.

அன்று இரவில் கிளிமொழி முன்னிறத்துனன்
மடங்கு பேரெழிலுடன் அவன் அறைக்கு வ் ணுக்
ஆனல், அவள் முகத்தில் துயரம் நிறைந்திருந் ரா
வழக்கம்போல் அவள், "ஏழுவருடம் நான் நடந்தன்
தேனே! என் அன்பே........," என்று பேசத் தொடங்
கினாள். உடனே தன் உயிரன்பான மனைவி கிளிமொழி
தான் அவள் என்பதை இளவரசன் உணர்ந்து பொங்கும்
அன்போடு வாரியணைத்துக் கட்டிக்கொண்டான். அவள்
வந்து தன்னை விடுவிப்பாள் என்று எதிர்பார்த்து
இத்தனைக் காலம் தான் பொறுமையோடு காத்திருந்ததை
அவளுக்கு அவன் தெரிவித்தான். மறுநாள் காலையிலும்
தன்னை விடுவிக்க அவள் வராவிட்டால் ஒன்றில் தான்
மலைமுடியாளை மணந்துகொள்ள வேண்டியிருக்கும்,
அல்லது என்றுமே பறவையாக மாறிவிட வேண்டி
யிருக்கும் என்பதையும் அவன் எடுத்துரைத்தான்.

மறுநாள் காலையில் எழில்வரம்பன் மகிழ்ச்சி
பொங்கத் தன் ஆருயிர் மனைவி கிளிமொழியாளை
அழைத்துக்கொண்டு மாளிகையின் கொலுமண்டபத்

ாமுடியாள் அதைக் கண்டு
பாகத் ;லவே ஒப்புக்கொண் ங்காது என்பதை உணர்ந்து
மறுத்துக்கொண்டாள். ற்ம் பொங்கிக் குமுறியதால்,
ளாகவும் ருந்திட்டு விட்டா ய மடிந்து விழுந்தாள். அன்று
கிளிமொ ணிரும் அவள் , கிளிமொழியும் அக்கோட்டை
வா ழியும் கூவி விட்டது ர்கள்.
மெய்க்கப் போகவேண்

தும் எழில்வரம்பன் தன் இன்னுயிர்

மறுநாள் அவ டைத்த மகிழ்ச்சியைக் கொண்டாடு
வாதாங்கொட்டை ருவிருந்து ஒன்று நடத்தினன். இவ்
அழகான உடை எல்லா நாட்டு அரசர்களும், அரசியரும்
நிறத்தைத் ற்பித்தனர். கிளிமொழியின் பேரழகை
அந்த உடை ும் வியந்தார்கள். அவளது நற்பண்பைப்
லுள்ள டினார்கள். எழில்வரம்பனும், கிளிமொழியும்
போல் றுபோல் என்றும் பெருமகிழ்வுடன் இன்புற்று
அழகி ந்தனர்.
முற்



௨. மூன்று அழகிகள்

முன்னொரு காலத்தில் அன்பழகன் என்ற ஒரு அரச குமாரன் இருந்தான். குடிகள் எல்லாம் அவன் மீது மிக்க அன்பாய் இருந்தார்கள். ஏன், என்றால், அவன் மிக்க அன்புள்ளவனாய் இருந்தது மட்டுமின்றி, மிக அழகும் உடையவனாய் இருந்தான். அவனைப்போல் அகன்ற மார்பும், திண்ணிய தோள்களும், கூரிய விழிகளும் உடைய அழகான ஒருவனை எங்குமே காணமுடியாது.

அன்பழகனுக்குக் கெடுமதி என்றொரு மைத்துனன் இருந்தான். கெடுமதிக்கும் குணமிலி என்ற பெண்ணுக்கும் திருமணம் நடக்கவிருந்தது. குணமிலி ஒரு பேராசைக்காரி; தீய குணங்களை உடையவள். அன்பழகன் இறந்துவிட்டால், அரசு உரிமை கெடுமதிக்கு வந்து விடும்; அதனால் குணமிலி தான் ராணியாக நினைத்து அன்பழகனை எப்படியாவது கொன்றுவிடும்படி கெடுமதியைத் தூண்டிக்கொண்டே இருந்தாள்.

அந்த நாட்டில் கருப்பி என்ற ஒரு மந்திரக்காரியிருந்தாள். அவள் மிகவும் பொல்லாதவள். பிறருக்குத் தீங்கு செய்துகொண்டிருப்பதே அவளுடைய வேலை. கெடுமதியும், குணமிலியும் இந்த மந்திரக்காரியைச் சந்தித்து அரசகுமாரனைக் கொல்லச் சூழ்ச்சி செய்தார்கள். அவர்கள் அரசகுமாரனை உடனடியாகக் கொன்றுவிடாமல் நோயை உண்டாக்கி மெதுவாகக் கொல்ல வேண்டும் என்று கருதினார்கள். அதனால், கருப்பி ஒரு மருந்தைக் கொடுத்து, அதை அரசகுமாரன் உணவில் கலந்து கொடுக்கும்படி கூறினாள்.

கெடுமதி அவ்வாறே மருந்து கலந்த உணவை அரச குமாரன் உண்ணும்படி செய்துவிட்டான். அதனால் நாளுக்கு நாள் அரசகுமாரனது உடல்நலம் குன்றியது;



மந்திரக்காரியும் குணமிலியும்

அவனால் வேட்டைக்குப்போக முடியவில்லை; சாப்பிட முடியவில்லை; சிரிக்கவும் முடியாமல் போய்விட்டது.

அன்பழகனின் உடல் நலம் குன்றுவதைக் கண்ட அரசர் மிக்க வருத்தம் அடைந்தார். அவர் மருத்துவரை அழைத்து அரசகுமாரனை முன்போல் சிரித்து விளையாடச் செய்ய ஏதேனும் வழியுண்டா என்று கேட்டார். அவர் அரசகுமாரன் மந்திரத்தால் கட்டுப்பட்டிருக்கிருன் என்றும், அவனை எப்படியாவது சிரிக்க வைத்துவிட்டால் மந்திரம் நீங்கிவிடும் என்றும் கூறினர்.

மறுநாள் அரசர், அரண்மனை முன்னுல் பெரிய கேளிக்கை நடத்தப்படும் என்றும், அந்தக் கேளிக்கையில் யாராவது அரசகுமாரனைச் சிரிக்கச் செய்துவிட்டால், அவர்களுக்குச் சிறந்த பரிசு அளிக்கப்படும் என்றும் முரசறைய உத்தரவிட்டார்.

கேளிக்கை நாள் அன்று, அரசகுமாரன் அரண்மனை மாடியின் மேல் மிக்க கவலையும் அதனுல் வாடியிளைத்த உடலும் உடையவனுய், நண்பர்களோடு உட்கார்ந்திருந்தான். அப்பொழுது மாலை நேரம்; தென்றல் வீசிக் கொண்டிருந்தது. அரண்மனை முன்னுல் நகர மக்கள் எல்லாரும் திரண்டிருந்தார்கள். நாடகக்காரர்களும், விகடர்களும், கோமாளிகளும் பல விளையாட்டுக்களைச் செய்து அரசகுமாரனை மகிழ்விக்க முயன்ருர்கள். ஆனுல், ஒருவராலும் சிரிக்கச் செய்ய முடியவில்லை.

அந்தக் கூட்டத்தில், கருப்பி என்ற அந்த மந்திரக்காரியும், யாராவது அரசகுமாரனைச் சிரிக்கச் செய்வதைத் தடுப்பதற்காக வந்திருந்தாள். ஆனுல், அவள் உருவத்தைப் பார்த்தவுடனேயே மற்றவர்களுக்குச் சிரிப்பு வந்துவிடும். நல்விதிவசமாய், அவள் மாவு வைத்திருந்த ஒரு கோணி தடுக்கிக் கீழே வீழ்ந்து மாவில் புரண்டாள். அவள் கையையும் காலையும் உதறிக்

கொண்டு, சீறிச் சினந்து இரைவதைக் கண்ட அரச குமாரன் சிரித்துவிட்டான். அவன் சிரிக்கச் சிரிக்க அவன் பழைய பலம் எல்லாம் உடலில் வந்துவிட்டது. முன்போல் அவன் அழகாக விளங்கினான்.

கருப்பிக்கோ, தானே தன் மந்திரத்தை நீக்கக் காரண மாய் இருந்ததை நினைத்து நினைத்துக் கோபம் பொங்கி வந்தது. ஆயினும், அவளால் ஒன்றும் செய்ய முடிய வில்லை. இருந்தாலும் பழிவாங்க வேண்டும் என்று நினைத்து, ''அரசகுமாரா! நீ 'மூன்று அழகிகளையும்' கண்டு அவர்களுள் ஒருத்தியை மணந்தால் அல்லாமல் உனக்கு மனஅமைதி ஏற்படாது,'' என்று சொல்லிவிட்டுக் கூட்டத்திற்குள் மறைந்துவிட்டாள்.

மறுநாள் அன்பழகன் இரண்டு இரும்புச் செருப்பு களைத் தந்தையிடமிருந்து வாங்கி அணிந்து கொண்டு, மூன்று அழகிகள் இருக்கும் இடத்தைத் தேடிப் புறப் பட்டான். அது நெடுந் தொலைவில் இருந்தது. அங்கே போவதற்கு, கரடுமுரடான வழிகளில் செல்லவேண்டும்.

மூன்று அழகிகளையும் 'குகைவாயாள்' என்ற ஒரு மந்திரக்காரி இரண்டாயிரம் மைல்களுக்கப்பால் உள்ள ஒரு பெரிய மலைக் கோட்டையில் அடைத்து வைத்திருந் தாள். அவர்களை அடைவதற்குப் பல இடையூறுகளி லிருந்து தப்ப வேண்டும். இந்த முயற்சியில் பல அரச குமாரர்கள் மாண்டுவிட்டார்கள்.

அன்பழகன் பல நாட்கள் மலைகளையும், காடு களையும், பள்ளத்தாக்குகளையும், ஆறுகளையும் கடந்து சென்றான். அவன் காலில் உள்ள இரும்புச் செருப்புகள் தேய ஆரம்பித்தன. கடைசியில் ஒரு நாள் அவன் அந்தக் கோட்டை இருந்த மலையைக் கண்டான். அது மிகவும்

அச்சந் தருவதாக இருந்தது. அதன்மேல் எளிதிலேயே
முடியாது. அன்பழகன் ஒரு புல் தரையில் தண்ணீர்
"கோட்டைக்குள் சென்று மூன்று அறைல், ஒமறைந்து
படிக் கொண்டு வருவது. குகைவாயாள் வந்த பூக்



ன. அவற்றில் ஒரு
டிருக்கிறார்கள். பூ
ளைப் பறித்து உன் உடைக்
க்கொண்டு ஓடி வந்துவிடு.
ணீர் இல்லாத இடத்தில் வைத்து
என்று கூறினான்.

ம் கேட்டவுடனே அன்பழகனுக்கு
ண்டாயிற்று. அவன் குள்ளனுக்குத்
தெரிவித்துவிட்டு, மலையுச்சியை அடைந்
எல்லாம் குள்ளன் சொல்லியவண்ணமே
னும் குள்ளன் சொல்லியவாறே எல்லா
த்துவிட்டு, பழங்களைத் தன் உடையில்
க்கும்பொழுது, குகைவாயாளின் அறை
பெரிய மந்திரக் கண்ணாடி கீழே விழுந்து
உடைந்துவிட்டது. குகைவாயாள் அந்தக்
துண்டுகளில், அன்பழகன் பழங்களைத்
ண்டு ஓடுவதைப் பார்த்துவிட்டாள். உடனே
றே! கயிறே! திருடனைப் பிடித்துக்கொள்,"
வினாள். உடனே கயிறு, "நான்மாட்டேன்,
மாகத் தண்ணீரில் ஊறிக்கிடந்த என்னை இந்த
தூக்கி வெயிலில் போட்டான். நான் அவனுக்
செய்யமாட்டேன்," என்றது. உடனே குகை
விடுவாசேமையல்காரனைப் பார்த்து, "வேலைக்காரா!
பொழுது உள்ள வேலைக்காரா! திருடனைப் பிடித்து
றினான். நுப்பில் போட்டுவிடு," என்றாள்.

கொ.. எலுமிச்சம் பழத்தைத் தயவு செய்து பறித்துத்
குமாரன் கேட்டான். உடனே அன்பழகனும் எழுந்
அவன் பழ..தைப் பறித்துக் கொடுத்தான். அதைத்
முன்போல் அவ உயரமாக வளர்ந்து மரத்தின் உச்சி

கருப்பிக்கோ, டான். அவன் அன்பழகனைப் பார்த்து,
மாய் இருந்ததை நினை! நீதான், மூன்று அழகிகளைத்
வந்தது. ஆயினும், அருள்ளும், என்னைக் கவனித்து
வில்லை. இருந்தாலும் பழிசெய்தாய். நான் உனக்கு
நினைத்து, "அரசகுமாரா! நீ 'மூன்டு வா. குகைவாயாள்
அவர்களுள் ஒருத்தியை மணந்தாலன்று அழகிகளையும்
மனஅமைதி ஏற்படாது," என்று நான் வழி கூறுகி
கூட்டத்திற்குள் மறைந்துவிட்டாள். சிறிய குடிசைக்குள்

மறுநாள் அன்பழகன் இரண்டு ழகனிடம் சிறிது
களைத் தந்தையிடமிருந்து வாங்கி அ டைப்பம் இவற்
மூன்று அழகிகள் இருக்கும் இடத்தை சொல்வதைக்
பட்டான். அது நெடுந் தொலைவில் இ ந்ததும், இரண்டு
போவதற்கு, கரடுமுரடான வழிகளில் வற்றை நெருங்
ளும்; ஆனால்,

மூன்று அழகிகளையும் 'குகைவாய ல் தடவினால்
மந்திரக்காரி இரண்டாயிரம் மைல்களுக் நீ கோட்டை
ஒரு பெரிய மலைக் கோட்டையில் அடைத் ஒரு பெரிய
தாள். அவர்களை அடைவதற்குப் பல இ . ஆனால்,
விருந்து தப்ப வேண்டும். இந்த முயற்சியில் யும் அதன்
குமாரர்கள் மாண்டுவிட்டார்கள். கொஞ்ச

அன்பழகன் பல நாட்கள் மலைகளையடுப்பைக்
களையும், பள்ளத்தாக்குகளையும், ஆறுகளையுபார்ப்பாய்.
சென்றான். அவன் காலில் உள்ள இரும்புச் டெப் பார்ப்
தேய ஆரம்பித்தன. கடைசியில் ஒரு நாள் அவக் கொடுத்
கோட்டை இருந்த மலையைக் கண்டான். அது தூரம்

சென்றதும் ஒரு கயிறு தண்ணீருக்குள் து, அவளையே பார்ப்பாய். அதை எடுத்து வெயிலில் க தண்ணீர் இவற்றை எல்லாம் செய்துவிட்டுச் சென்றால், ஒ மறைந்து யான மரம் தென்படும். அந்த மரத்தில் சிவந்த பூக் நடுவில் மூன்று பழங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒரு மூன்று அழகிகளும் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். பூ களைத் தொடாமல் அப்பழங்களைப் பறித்து உன் உடைக்குள் மறைத்து வைத்துக்கொண்டு ஓடி வந்துவிடு. ஆனால் பழங்களைத் தண்ணீர் இல்லாத இடத்தில் வைத்து மட்டும் நறுக்காதே," என்று கூறினான்.

இதை எல்லாம் கேட்டவுடனே அன்பழகனுக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாயிற்று. அவன் குள்ளனுக்குத் தன் நன்றியைத் தெரிவித்துவிட்டு, மலையுச்சியை அடைந்தான். அங்கே எல்லாம் குள்ளன் சொல்லியவண்ணமே இருந்தன. அவனும் குள்ளன் சொல்லியவாறே எல்லாவற்றையும் செய்துவிட்டு, பழங்களைத் தன் உடையில் மறைத்து வைக்கும்பொழுது, குகைவாயாளின் அறையில் இருந்த ஒரு பெரிய மந்திரக் கண்ணாடி கீழே விழுந்து சுக்குநூறாக உடைந்துவிட்டது. குகைவாயாள் அந்தக் கண்ணாடித் துண்டுகளில், அன்பழகன் பழங்களைத் திருடிக்கொண்டு ஓடுவதைப் பார்த்துவிட்டாள். உடனே அவள் "கயிறே! கயிறே! திருடனைப் பிடித்துக்கொள்," என்று கூவினாள். உடனே கயிறு, "நான்மாட்டேன், நெடுங்காலமாகத் தண்ணீரில் ஊறிக்கிடந்த என்னை இந்த மனிதன் தூக்கி வெயிலில் போட்டான். நான் அவனுக்குத் தீங்கு செய்யமாட்டேன்," என்றது. உடனே குகைவாயாள் சமையல்காரனைப் பார்த்து, "வேலைக்காரா! என் நன்றி உள்ள வேலைக்காரா! திருடனைப் பிடித்து எரிகிற அடுப்பில் போட்டுவிடு," என்றாள்.

கொல ..லுமிச் சமையற்காரன், "நான் மாட்டேன். பல
குமாரன் ..க நான் இந்த அடுப்பைக் கையால் துடைத்து
அவன் பல ..ன். இந்த மனிதன் எனக்கு ஒரு துடைப்
முன்போ ..த் தந்தான். அவன் அஞ்சாமல் போகட்டும்,"
..ருன். மந்திரக்காரி உடனே நாயைப் பார்த்து, "நன்றியுள்ள நாயே! திருடனைக் கொன்றுவிடு," என்ருள். நாய் "நான் மாட்டேன். பல மாதங்களாக நான் பட்டினியாக இருக்கிறேன். இந்த மனிதன் எனக்கு அப்பம் கொடுத்தான். நான் அவனுக்குத் தீங்கு செய்யமாட்டேன்," என்றது. உடனே குகைவாயாள், "கதவுகளே! திருடனை உள்ளே விட்டு அடைத்துக் கொள்ளுங்கள்," என்ருள். கதவுகள், "நாங்கள் இவ்வளவு நாளும் துருப்பிடித்திருந்தோம். இந்த மனிதன் எங்களுக்கு எண்ணெய் தடவினுன். அதனுல் நாங்கள் அவனை விட்டு விடுவோம்," என்று சொல்லித் திறந்து கொண்டன.

இவற்றை எல்லாம் கேட்ட குகைவாயாள், 'ஓ' என்று அலறிக் கத்தினுள். உடனே அந்தக் கோட்டையின் மேல் பேரிடி விழுந்தது. குகைவாயாள் இறந்து விட்டாள். கோட்டையும் அதில் உள்ள எல்லாப் பொருள்களும் மறைந்து விட்டன.

இதற்குள், அன்பழகன் பழங்களை எடுத்துக் கொண்டு ஓடிக்கொண்டே இருந்தான். முன்போலவே மலைகளையும், பள்ளத்தாக்குகளையும், காடுகளையும் கடந்து சென்று, ஒரு சிற்றேடையின் அருகில் மரநிழலில் அமர்ந்தான். உடனே ஒரு பழத்தை நறுக்கினுன். உடனே ஒரு அழகான பெண் பழத்திலிருந்து வெளியே வந்தாள். அவனை வணங்கி, "எனக்குத் தண்ணீர்

வேண்டும்,'' என்றாள். அன்பழகன் திகைத்து, அவளையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். தண்ணீர் கொடுக்கவில்லை. அந்த அழகி உடனே மறைந்து விட்டாள்.

ஏமாற்றம் அடைந்த அன்பழகன் இன்னொரு பழத்தை நறுக்கினான். இப்பொழுதும் ஒரு அழகி வெளி வந்து, ''தண்ணீர் வேண்டும்,'' என்று கேட்டாள். அன்பழகன் தண்ணீர் கொணர ஏனம் ஒன்றும் இல்லாமல் அங்குமிங்கும் அலைந்தான். அதற்குள் அந்த அழகியும் மறைந்து விட்டாள்.

அன்பழகன் மிகவும் ஏமாற்றம் அடைந்து தலையைப் பிய்த்துக்கொண்டான். முன்போல் ஏமாறாமல் இருக்க ஒரு சிப்பியில் தண்ணீர் எடுத்துத் தன் கையில் வைத்துக்கொண்டு மூன்றாவது பழத்தை நறுக்கினான். 'அதிலிருந்து ஓர் அழகி வருவாளோ? மாட்டாளோ? வந்தாலும், முன்போல் மறைந்து விடுவாளோ!' என்று அவன் அஞ்சினான். ஆனால், இப்பொழுது முன்னவர்களிலும் எழில் சிறந்த ஒரு பெண் வெளியே வந்தாள். அவள் தாமரைபோன்ற முகமும், மீன்போன்ற கரிய விழிகளும், மழைமுகில் போன்று இருண்டு செறிந்த கூந்தலும் உடையவளாய் விளங்கினாள். அன்பழகன் அவள் அழகைக் கண்டு வியப்பும் மகிழ்வும் ஒருங்கே அடைந்தான்; ஆனால், அவன் அவளையும் இழந்துவிட விரும்பவில்லை. அதனால் அவள், ''சிறிது தண்ணீர் தா,'' என்று கேட்டபோது, அவன் சிப்பியில் உள்ள நீரை அவளிடம் கொடுத்தான். அவள் அவனை வணங்கி, அவனை மணந்துகொள்ள இசைந்தாள். அவள் தன் பெயர் எழிலரசி என்று தெரிவித்தாள்.



அன்பழகனும் எழிலரசியும்

அன்பழகன் எழிலரசியிடம், அவள் தன் நாட்டுக்குள் வரும்போது அழகிய ஆடைகளை அணிந்து, தேர்மேல் இவர்ந்து, பணியாட்கள் புடைசூழ வரவேண்டும் என்றும், தான் அதற்கு ஆவன செய்யும்பொருட்டுத் தன் நாடுசென்று வரவேண்டும் என்றும் கூறினான். அதற்கு எழிலரசியும் இணங்கி; அவன் திரும்பி வருமளவும் தான் ஒரு மரத்தின்மேல் ஏறி மறைந்திருப்பதாகக் கூறினாள். அன்பழகனும் அவளை மரத்தில் வைத்து விட்டுத் தன் நாட்டுக்கு வேகமாகத் திரும்பினான்.

மந்திரக்காரக் கருப்பி தன்னை அன்பழகனும் குள்ளனும் வென்றதைக் கண்டு, அன்பழகனுக்கும் எழிலரசிக்கும் தீங்குசெய்ய நினைத்தாள். அவள் அதனால் தன்னுடைய வேலைக்காரியான மாறுகண்ணி என்பவளை எழிலரசியைக் கொல்லுவதற்காக அனுப்பினாள்.

மாறுகண்ணி எழிலரசியிருந்த மரத்தடியில் வந்து அவள் உருவ அழகை ஓடை நீரில் பார்த்து அவள்மேல் தீராப் பொறாமை கொண்டாள். அவள் எழிலரசியைப் பார்த்து அவள் மரத்தின்மேல் மறைந்திருக்கக் காரணம் என்ன என்று கேட்டாள்.

எழிலரசி களங்கமற்றவளாதலால் மாறுகண்ணியிடம் எல்லாவற்றையும் கூறிவிட்டாள். உடனே மாறுகண்ணி இவள்தான் நாம் கொல்ல வேண்டியவள் என்று தெரிந்து, "அழகியே! நான் அங்கே வந்து உனக்குத் தலைவாரி விட்டால் உன் அழகு அதிகமாகும். அங்கு வரலாமா," என்றாள். எழிலரசியும் அதற்கு இசைந்தாள். மாறுகண்ணி அவள் தலையை வாரிவிடுவதைப் போல் பாசாங்கு செய்து ஒரு ஊசியை அவள் தலையில் செருகிவிட்டாள். உடனே எழில் அரசி ஒரு புறுவாக

மாறி, வானத்தில் பறந்து விட்டாள். உடனே மாறு கண்ணி எழில் அரசி இருந்த இடத்தில் இருந்து அன் பழகன் வருகையை எதிர்பார்த்து இருந்தாள்.

அன்பழகன் திரும்பி வந்து, அங்கே மாறுகண்ணி இருப்பதைக் கண்டதும், அவனுக்குக் கோபமும் வருத் தமும் பொங்கி வந்தன. அவன் அவளைக் கொல் லப்போனான். ஆனால், தந்திரமுள்ள அவள் "இளவரசே! கோபம் கொள்ளாதே. வெயி லில் நான் கறுத்துப் போனேன். ஆனால் கூடிய சீக்கிரம் பழைய நிறம் வந்துவிடும்," என்றும் கூறினாள். அன்பழகனால் ஒன்றும் செய்ய முடியவில்லை.


எழிலரசியும் மாறுகண்ணியும்

மாறுகண்ணி எழி லரசிக்காகக் கொண்டு வரப்பட்ட உடைகளை அணிந்துகொண்டு, தேரில் ஏறி நாட்டுக்குப் புறப்பட் டாள். அன்பழகன் உள்ளம் வெதும்ப அவளோடு சென்றான். நாட்டு மக்களிடம் எல்லாம் தான் அழகிய மனைவியைக் கொண்டு வருவதாகக்கூறி, மாறுகண்ணி யைக் கூட்டிச்செல்வதால் அவனுக்குத் துயரமும் வெட் கமும் பொங்கிப் பொங்கி வந்தன. இதைக்கண்ட அரச னும் அரசியும் திகைப்படைந்தனர். ஆயினும் மணச் சடங்குகளெல்லாம் நிறைவேறின. ஆனால், மணவிருந்

தின்போது ஒரு வெள்ளைப்புரு பறந்துவந்து அரசகுமாரன் தோளின்மேல் அமர்ந்தது. அதைக் கண்ட மாறுகண்ணி அதைத் துரத்தினாள். ஆனால், அன்பழகன் அதைத் தட்டிக்கொடுத்தான். அப்பொழுது அது அவன் காதில், "அழகிய இளவரசே என் தலையில் உள்ள ஊசியை எடுத்துவிடு," என்று கூறியது. உடனே அன்பழகன் அதை எடுத்துவிட்டான். அப்பொழுது எழிலரசி தன் அழகிய உருவத்தோடு அங்கே தோன்றினாள்.

மகிழ்ச்சியடைந்த அன்பழகன், எழிலரசிக்கு அழகு மிக்க ஆடைகளைக் கொடுக்கும்படி உத்தரவிட்டான். அன்பழகன் அவளை அழைத்துக்கொண்டு அரசனும் அரசியும் இருக்கும் இடம் சென்று, அவர்களிடம் எப்படி மாறுகண்ணி அவளைப் புருவாக மாற்றிவிட்டாள் என்பதைக் கூறினான்.

உடனே மாறுகண்ணியும், கறுப்பியும் அரசனின் கட்டளைப்படி கடலில் தூக்கி எறியப்பட்டனர். அன்பழகனுக்கும், எழிலரசிக்கும் இனிதே திருமணம் நடைபெற்றது.

௲. துளசி


பன்னெடுங்காலத்துக்கு முன்பு பழையனூர் என்னும் ஊரில் ஆண்டாள் என்றொரு குடியானவப் பெண் இருந்தாள். அவளுக்கு ஏழு ஆண் மக்கள் இருந்தனர். அவளும் அவள் கணவனான சடையனும் அப் பிள்ளைகளும் மிகவும் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தனர். ஆயினும் அப் பிள்ளைகளுக்குத் தங்களுக்கு ஒரு தங்கை இல்லையே என்று ஒரு குறை இருந்தது. தாங்கள் செல்வமாகப் பாராட்டிச் சீராட்டுவதற்கு ஒரு குட்டித் தங்கை வேண்டுமென்று அவர்களுக்கு அளவில்லாத அவா இருந்தது. ஆயினும், எவ்வளவோ காலங் கழிந்தும் அவர்கள் வீட்டில் தங்கை பிறக்கவே இல்லை. எனவே அவர்களுக்கு ஆழ்ந்த வருத்தம் ஏற்பட்டது.

ஒரு நாள், அவ் வீட்டின்முன் ஒரு கிழவி மிகுந்த பசியோடு உணவு வேண்டுமென்று கேட்டு வந்தாள். ஆண்டாள் அவளுக்கு இலை நிறையச் சோறும் கறியும் போட்டுத் திண்ணையில் உட்காரவைத்துச் சாப்பிடச் செய்தாள். பசி ஆறியபின் அக் கிழவி முகத்தில் மகிழ்ச்சி ததும்பியது. அவள் ஆண்டாளைப் பார்த்து, “அம்மா, நீ நல்லவளாக இருக்கிறாய். நான் உனக்கு எப்படிக் கைம்மாறு செய்வது? நீ மிக்க அவாவுடன் எதையாவது விரும்புகிறாயா? சொல்,” என்று கேட்டாள்.

“அம்மா, எனக்கு உலகத்தில் ஒரே ஒரு பொருள் மீதுதான் அளவில்லாத அவா; ஆனால், அது எனக்கு எங்கே கிடைக்கப்போகிறது! எனக்கு ஒரு பெண் குழந்தை பிறக்க வேண்டும் என்று நான் நீண்ட நாளாய்

நோன்பிருந்து வருகிறேன்; பயனில்லை," `தளிந்த ஆண்டாள் கூறினாள். 'ாரி

உடனே அக் கிழவி ஆண்டாளிடம் ஒரு சிறு பூத் தொட்டியைக் கொடுத்தாள். அதில் ஒரு சிறிய துளசிச்



ஆண்டாளிடம் கிழவி பூத்தொட்டியைக் கொடுத்தல்

செடி இருந்தது. "இந்தத் துளசிச் செடிக்குச் சண்பகச் சோலை ஊற்றிலிருக்கும் தெளிந்த தண்ணீரை நாள்

ம வார்த்து நீ அதை வளர்த்து வா. ஒரு மாதம் படிச் செய்தால் உனக்கு நீ விரும்பியபடி ஒரு பெண் குழந்தை பிறக்கும். உன் பிள்ளைகளை அனுப்பினுல் அவர்கள் அத் தண்ணீரைக் கொண்டு வருவார்கள்,'' என்று கிழவி கூறிச் சென்றுள்.

தாயும் பிள்ளைகளும் அதைக் கேட்டு அளவில்லாத உவகை அடைந்தனர். அந்த அழகிய பூத் தொட்டியை அவர்கள் வீட்டு முன்புறத்தில் உள்ள மாடத்தில் பத்திரமாக வைத்தனர். உடனே, பிள்ளைகள் ஏழுபேரும் சண்பகச் சோலையில் உள்ள தெளிந்த நீர் ஊற்றைத் தேடிச் சென்றனர். தங்கள் நெடுநாளைய விருப்பம் நிறைவேறப் போகிறது என்பதை உணர்ந்த அவர்களின் ஊக்கத்துக்குக் கேட்பானேன். சண்பகச் சோலைக்கு வந்ததும் அவர்கள் நெடுகிலும் சுற்றிப் பார்த்தார்கள். ஊற்ரோ, சுனையோ ஒன்றுமே கண்ணில் படவில்லை. அப்போது ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்த கடைக் குட்டிப் பையன் கண்ணன் முன் திடீரென ஒரு கலைமான் குதித்தோடி வந்தது.

''ஏனப்பா, நீ தெய்வச் சுனைநீர் எங்கிருக்கிறது என்றுதானே தேடுகிருய்?'' என்று அக் கலைமான் அவனிடம் கேட்டது.

மான் பேசுவதைக் கேட்ட கண்ணனுக்குப் பெரு வியப்பு ஏற்பட்டதாயினும், அவன் அதற்கு உடனே பதில் கூறினுன்: ''ஆம். அது எங்கிருக்கிறது என்று கூறினுல் உனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு. அது இருக்குமிடம் தெரியுமா?''

''தெரியுமாவா? எனக்குத் தெரியாமல் வேறு யாருக்குத் தெரியும்? உன்னை நான் அங்கே அழைத்துச்

செல்கிறேன். ஆனால், நீ அதிலுள்ள தெளிந்த தண்ணீரை உன் வீட்டுக்குக் கொண்டுசென்றபின் யாரிடமும் சொல்லாமல் என்னிடம் வந்துவிடவேண்டும். இதற்கு நீ உடன்பட்டால் நான் உன்னை அந்த ஊற்றுக்கு இட்டுச் செல்கிறேன்," என்று அக் கலைமான் கூறியது.

"கட்டாயம் வருகிறேன்," என்று கண்ணன் கூறினன்.

தன் சொற்படி நடக்க ஒப்புக்கொண்ட கண்ணனை அக் கலைமான், செடிகள் இருபுறமும் கவிந்திருந்த ஒரு புதர்வழியினூடே கூட்டிச் சென்று, காடடர்ந்து செழித்திருந்த ஓர் அழகான இடத்தில் கொண்டுவிட்டது. அந்த இடத்தைச் சுற்றி மருது, கடம்பு, தேவதாரு, தேக்கு, ஈட்டி, கருங்காலி முதலிய பல பெரு மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன. அவைகளின் இலைகள் செறிந்த கிளைகள் பகலவன் கதிர்கள் உள்ளே நுழையாமல் தடுத்துக் கொண்டிருந்தன. ஏதோ ஒருசில இடைவெளிகள் இருக்குமிடங்களில், அக் கதிர்கள் இருளைப் பிளந்து கொண்டு கீழ்நோக்கி வந்ததானது, கதிரவன் தன் விரலை நீட்டி எதையோ சுட்டிக் காட்டுவதுபோல் இருந்தது. அப்படி ஒளிபடிந்திருந்த ஒருசிறு பாறையருகில், பசும் புல் தரையில், மல்லிகையும், முல்லையும் மலர் சொரிந்து கொண்டிருந்த ஒரு மூலையில், பாலைவிட வெண்மையான சிறிய வெண்சங்கு ஒன்று இருந்தது. அச் சங்கில், தெள்ளெனத் தெளிந்த இரண்டு துளித் தண்ணீர்இருந்தது.

"இதுதான் அப்பா நீ தேடிவந்த ஊற்றுநீர். இதைக் கொண்டுபோய் உன் தாயாரிடம் கொடுத்துவிட்டு யாருக்கும் தெரியாமல் என்னிடம் திரும்பி வந்துவிடு," என்று அக் கலைமான் கூறியது.

கண்ணன் தான் கொண்டுவந்திருந்த சிறிய செம்பில் அந் நீரை ஊற்றி எடுத்துக்கொண்டு தன் வீடு போய்ச் சேர்ந்தான். தங்கள் வருகைக்காகத் தேடிக் கொண்டிருந்த தன் தாயாரிடம் அத் தண்ணீரை ஒப்படைத்து விட்டு, அவள் வேறு பக்கம் திரும்பியதும், யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் அவன் சண்பகச் சோலைக்குத் திரும்பி வந்து சேர்ந்தான்.

அவனுக்காகக் காத்திருந்த கலைமான், "என் பின்னோடு வா," என்று கூறி அவனை மற்றொரு பக்கமாக அழைத்துச் சென்று, ஒரு கற்குகையினருகே கொண்டுவிட்டது. அக் குகை பாறையில் குடைந்தெடுத்த குகை; அது ஒரு வீடுபோலவே அமைந்திருந்தது. அக் குகை வீட்டினுள் நுழைந்ததுமே கலைமான் திடீரென ஒரு பூதமாக மாறிவிட்டது.

"இனி நீ என்னைவிட்டுத் தப்ப முடியாது. இங்கேயே எனக்குப் பணியாளாக இருக்கவேண்டும். உன் வாழ்நாள் முழுவதும் உனக்கு அந்த நிலைதான்," என்று அந்தப் பூதம் கத்தியைக் காட்டி அச்சுறுத்திக் கொண்டே கண்ணனிடம் கூறியது.

மறுநாள், கண்ணனுக்கு நேர்ந்ததேபோல் அவனுக்கு மூத்த நம்பிக்கும் நேர்ந்தது. அவனும் தெளிந்த ஊற்றுநீர் இருக்கும் இடம்தேடி வந்தபோது, கலைமானைக் கண்டு அதன் உதவியால் அந்த ஊற்றுநீர் இருக்கும் இடத்தைக் கண்டு, அத் தண்ணீரைத் தன் தாயிடம் கொடுத்துவிட்டு, தனக்கு உதவி செய்த கலைமானுக்குத் தன்னையே கைம்மாறாக அளிக்க வந்தான். கற்குகைக்கு அவனை இட்டுவந்த கலைமான் தன் உண்மை உருவத்தைக் காட்டி அவனையும் தனக்குப் பணியாளாக இருக்குமாறு பணித்துவிட்டது.

அதற்குப் பிறகு அதேபோல் ஒவ்வொரு அண்ண
னாக முறையே திருவாழி, ஏழுமலை, பெருமாள், திருவடி,
ஆழ்வார் ஆகிய அத்தனை பேருமே பூதத்தின் வேலையாட்க



கண்ணனைப் பூதம் அச்சுறுத்தல்

ளாகிவிட நேர்ந்தது. தன் மக்கள் எழுவரும் மறைந்
ததைக் கண்ட தாயார் மனம் பொருது வருந்தினாள்.
என்ன மாயமோ என்று கருதித் துயரடைந்தாள்.

ஆனுல், அவள் துயரத்தைத் துடைப்பதற்கும் அவளது நெடுநாளைய விருப்பத்தை நிறைவேற்றி வைப்ப தற்கும் வந்தாற்போல், துளசிச் செடியின் வரத்தால் ஆண்டாளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்குத் துளசி என்று பெயர் வைக்கப்பட்டது.

துளசி அழகு மிக்க பெண்ணுக வளர்ந்து வந்ததுடன், நற்பண்புள்ளவளாகவும் உருவாகி வந்தாள். அவள் தன் தாயாருக்குச் சில்லறை வேலைகளைச் செய்து உதவி யாக இருந்ததுடன் மனதுக்கும் ஆறுதல் அளித்து வந்தாள். இப்படியெல்லாம் இருந்தும் ஆண்டாளுக்குத் தன் அருமைப் புதல்வர்களை மறக்க முடியவில்லை. அவள் துளசிக்கு அவர்களைப்பற்றி அடிக்கடி கூறி வந் தாள். துளசி பிறப்பதற்காக அவர்கள் தெளிந்த நீர் ஊற்றைத் தேடிச் சென்றதையும், அத் தண்ணிரைக் கொண்டு தந்தபின் ஒவ்வொருவராக மாயமாய் மறைந் ததையும் ஆண்டாள் துளசிக்குக் கதையாகக் கூறிவந் தாள். துளசிக்குத் தன் அண்ணன்மார்களைப் பார்க்க வேண்டும் என்ற அவா சிறிது சிறிதாகப் பெருகி வந்தது. ஒருநாள், முழு நிலா வெள்ளிபோல் காய்ந்துகொண் டிருக்கையில் தாயும் மகளும் முற்றத்திலிருந்து நிலாச் சோறு சாப்பிட்டுக்கொண் டிருந்தார்கள், அம்மை சற்று மனமகிழ்வாக இருந்த அச் சமயத்தில், துளசி தான் போய் தன் சகோதரர்களைத் தேடிக் கண்டுபிடித்து வர விரும்புவதைத் தெரிவித்தாள். தன்னைப் போகவிடு மாறு தாயை வற்புறுத்தினுள்.

முதலில் ஆண்டாள் அதற்குச் சிறிதும் இணங்க வில்லை. தனக்கு இப்போது இருப்பது ஒரே ஒரு மகள் தான்; எனவே, அவளையும் பிரிந்திருக்கத் தன் உள்ளம் ஒப்பவில்லை என்று கூறி மறுத்து விட்டாள். ஆனுல்,

துளசிக்கோ, தன் அண்ணன்மார்களைப் பார்க்கவேண்டும் என்ற துடிப்பு அடக்க முடியாததாகிவிட்டது. அவள் தாயிடம் மிகவும் மன்றாடிக் கெஞ்சினாள். ஆண்டாளுக்கும் உள்ளூற எப்படியாவது தன் மக்கள் திரும்பிவிட மாட்டார்களா, பார்க்கமாட்டோமா என்ற ஏக்கம் இருக்கத்தான் செய்தது; ஆசையும் தலைதூக்கி நின்றது. எனவே, கடைசியாக அவள் அதற்கு ஒருவாறு இணங்கினாள். திருப்பதி வழிபாட்டுக்குப் புறப்படுவதுபோல் மஞ்சள் ஆடை யணிந்து, மலர்மாலை சூடி, துளசி வழி நடந்தாள். அக்கம் பக்கம் பார்த்துப் பத்திரமாகப் போய்வருமாறு சொல்லி அவள் தன் மகளை வழியனுப்பி வைத்தாள். விரைவில் திரும்பிவிடும்படியும் அவள் துளசிக்குக் கூறினாள்.


துளசி நெடுக நடந்துகொண்டே இருந்தாள். அன்று மாலை அவள் சண்பகச் சோலைக்கு அருகில் உள்ள ஒரு சத்திரத்துக்கு வந்து சேர்ந்தாள். ... பலர் கூடி இருந்தனர். சிலர் சாப்பிட்டுவி... ...ரிக் கொண்டிருந்தனர். சிலர் ...
உணவருந்திக் கொண்டிருந்...
யோடு பாசுரங்களைப் பா...
அவர்க... யாராவ...
பார்த்ததுண்டா எ...
போயிருக்கக் கூ...
என்றும் கேட்...

" அ...
சண்பகச் ...
காரர்களாக...
என்று ஓ...
தொன்...

இருக்கும் இடம் நெடுந்தொலைவுக்கு அப்பால் இருக்கிறது. வழி தெரியாதவர்கள் அங்கேபோய்ச் சேரமுடியாது. மேலும், அப்படி அங்கே போனாலும், அப் பூதத்தின் கையில் சிக்கிவிடக் கூடாது. அப் பூதம் ஆண்பிள்ளைகளை ஒன்றும் செய்யாது. ஆனால், அருகில் எந்தப் பெண் வந்தாலும் அது உடனே அவளை அப்படியே தூக்கி விழுங்கிவிடும்,'' என்று நரைத்துத் திரைத்த அக் கிழவி மேலும் கூறினாள்.

தன்னை அப்படியே விழுங்கிவிடக்கூடிய பூதத்தைப் பற்றிக் கேட்டதுமே துளசிக்கு உடல் நடுங்கிவிட்டது. ஆயினும் மற்றொரு புறத்தில், தன் அண்ணன்மார்களைப் பற்றிச் செய்தி கிடைத்தது அவளுக்கு அளவில்லாத மகிழ்ச்சியை ஊட்டியது. மறுநாள் அவள் மன ஊக்கம் காரணமாக எப்படியோ தேடியலைந்து சண்பகச் சோலைக்கு வந்துவிட்டாள். சுற்றுமுற்றும் திரிந்து பார்த்... கடைசியில் பூதத்தின் குகைக்கு அருகில் வந்... துளசிக்கு அங்கே கண்ணன் விறகு வெட்டிக்
...வண்டும் என்ற அவா...ள் கண்டாள். அவன் தன்
ஒருநாள், முழு நிலா வெ... உடனே அவள் உணர்ந்து
டிருக்கையில் தாயும் மகளும் ... ஒவ்வொரு புதல்வனது
சோறு சாப்பிட்டுக்கொண் டிருந்தா...வளவு நுமைக்கமாக
மனமகிழ்வாக இருந்த அச் சமயத்த... நெருங்கிச் சென்று
போய் தன் சகோதரர்களைத் தேடிக் க...
விரும்புவதைத் தெரிவித்தாள். தன்னை...து. ஆனால்,
மாறு தாயை வற்புறுத்தினாள். ...டுமென்று

முதலில் ஆண்டாள் அதற்குச் சிறிதும் அவனுக்கு
வில்லை. தனக்கு இப்போது இருப்பது ஒரே ... தானும்,
தான்; எனவே, அவளையும் பிரிந்திருக்கத் தன்...ாக இருக்
ஒப்பவில்லை என்று கூறி மறுத்து விட்டாள். ...மார்க



துளசியைக் கண்ட அண்ணன்மார்கள் மகிழ்ச்சியடைதல்

ளிடம் உடனே இட்டுச் சென்ருன். அவர்கள் குகை வீட்டினுள்ளே சமையல் வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பூதம் வேட்டைக்காக வெளியே போயிருந்தது. தங்கையைக் கண்ட சகோதரர்களுக்கு ஒரே கொண்டாட்டமாயிருந்தது. பூதத்தின் பிடியிலிருந்து எப்படியாவது தப்பிச் சென்றுவிட வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு உண்டாய்விட்டது. அங்கிருந்தால், தங்கள் தங்கைக்குக் கேடு நேரும் என்பதையும் அவர்கள் உணர்ந்தனர். எனவே, அவளை அடுக்களையில் அடைத்து வைத்துவிட்டு, தப்பிச் செல்வதற்கான வாய்ப்பை எதிர்நோக்கி இருந்தார்கள். அடுக்களையிலிருக்கும் தங்கையிடம் சமையல் வேலையைப் பார்த்துக் கொள்ளும்படி கூறினுர்கள். அவளுக்கு அவர்கள் மற்றொரு எச்சரிக்கையும் செய்தார்கள். அவள் எந்த உணவையாவது பண்டம் பலகாரத்தையாவது தின்ருலுஞ் சரி, அதில் ஒரு பகுதியை அடுக்களையில் உள்ள கறுப்புப் பூனைக்குக் கொடுத்துவிட்டுத் தின்னும்படி அவர்கள் தங்கள் தங்கையைக் கேட்டுக்கொண்டார்கள். அப் பூனைக்கு அவளிடம் வெறுப்பு ஏற்பட்டால், அது பெருங் கெடுதலை உண்டுபண்ணிவிடும் என்றும் அவர்கள் துளசிக்கு அறிவுறுத்தினுர்கள்.

துளசியும் சில நாட்கள் வரையில் சொல்லியபடியே நடந்து வந்தாள். எல்லாம் இனிது நடந்துவந்தன. தங்கை தங்களுடன் இருந்ததால் அண்ணன்மார்களுக்குப் பொழுது போவதே தெரியாமலிருந்தது. துளசிக்கும், வீட்டுவேலை செய்வதும் பூனையோடு விளையாடுவதும் நல்ல பொழுதுபோக்காகவே இருந்தது. தாங்கள் வீடு திரும்பும் நன்னளை எல்லாரும் எதிர்பார்த்துக்கொண்டு இன்பமாகக் காலங் கழித்து வந்தனர். கண்ணன் ஒரு

நாள் கோயில் அப்பம் ஒன்றைக் கொண்டு வந்தான். இனிப்புப் பண்டம் தின்பதில் அவா மிக்கிருந்த துளசி அன்று பூனைக்கு அப்பத்தில் ஒரு துண்டுகூடக் கொடுக்காமல் முழுவதையும் தானே தின்றுவிட்டாள். பூனை சினங்கொண்டு அடுப்பில் தண்ணீரைக் கொட்டி நெருப்பை அணைத்துவிட்டது. அப்பாவி துளசிக்கு யாது செய்வதென்றே தெரியவில்லை. தீமூட்டுவதற்கு நெருப்புக் குச்சி கிடையாது. தன் அண்ணன்மார் அறிவுறுத்தியிருந்ததை மறந்து, பூதத்தின் அறையில் கணப்பு மாடத்தில் இருந்த நெருப்புக் கங்குகளை எடுத்து வந்து அடுப்பில்போட முற்பட்டாள். அப்போது அங்கு வந்து கொண்டிருந்த பூதத்துக்கு அவள் வாடை தட்டிவிட்டது. "என்ன! இங்கே பெண் வாடை வீசுகிறதே!! கொண்டு வாருங்கள் அந்தப் பெண்ணை இப்போதே பொரித்துத் தின்றுவிடுகிறேன்," என்றது பூதம்.

துளசி குலை நடுங்க ஓடிவந்து அடுக்களைக் கதவைத் தாழ்ப் போட்டு, அங்கிருந்த விறகுக் கட்டைகளை கதவுக்கு அண்டை கொடுத்து வைத்தாள். பூதம் தன் கத்தியைத் தீட்டிக்கொண்டு அவளைத் தேடி அங்கே ஓடி வந்து, கதவைத் திறக்க முயன்றது. ஆனால், கதவு உறுதியாக இருந்தமையால், பூதத்தால் அதைத் திறக்க முடியவில்லை. குகை வீட்டுக்கு வெளியே வேலை செய்து கொண்டிருந்த ஏழு பிள்ளைகளும் அங்கு நடந்த ஆரவாரத்தைக் கேட்டு உள்ளே ஓடிவந்தனர். பூதம் சொல்லிய விவரத்தைக் கேட்டதும், அவர்களுக்குத் தங்கள் தங்கையின் ஆபத்தான நிலைமை தெரிந்துவிட்டது. உடனே அவர்கள் பூதத்திடம், "அந்தப் பொல்லாத பெண் இங்கே எப்படி வந்தாள் என்பது எங்களுக்குத் தெரியாது. எங்களோடு வந்தால் பின்

வாசல் வழியாக அடுக்களைக்குள் நுழைந்து விடலாம்; போவோம்,'' என்று கூறினார்கள்.

தங்களைப் பின் தொடர்ந்த பூதத்தைத் தோட்டத்தில் தாங்கள் தோண்டிவைத்திருந்த ஆழமான குழிக்கு அருகில் அழைத்துச் சென்று அக்குழிக்குள் பூதத்தை அவர்கள் தலை குப்புறத் தள்ளிவிட்டார்கள்; உடனே குழியில் மண்ணையும் கொட்டி பூதத்தை உயிரோடு புதைத்து விட்டார்கள். பூதம் இனி ஒரு கெடுதியையும் விளைக்க முடியாது என்று தெரிந்த பின், அவர்கள் தங்கள் தங்கையை வெளியே விடுவித்தனர்.

பூதம் மடிந்த பிறகு, அக் குகை வீடும் அங்கிருந்த செல்வமும் அவர்கள் உடைமையாகி விட்டன. அப்போது மாரிக்காலம் ஆனபடியால், அங்கேயே சிறிது காலம் தங்கிவிட்டு, வெயில் காலம் வந்ததும் வீடு திரும்பலாம் என்று அவர்கள் முடிவு செய்தார்கள், தங்கள் தங்கையிடம் மட்டும் அவர்கள் கண்டிப்பாக ஓர் எச்சரிக்கை செய்தார்கள்: ''நம் வீட்டுக்கு நீ தான் அரசி; ஆனால், பத்திரம், ஒன்று மட்டும் நீ செய்யக் கூடாது. பூதம் புதையுண்டுள்ள இடத்தில் முளைக்கும் எந்தச் செடியையும் நீ தொடவே கூடாது. அதில் சிறிதேனும் நீ பிசகி நடந்தால், பெருங் கேடு விளையும். முன்பு நாங்கள் சொன்னதைக் கேட்காததால் ஏற்பட்ட ஆபத்தை மறந்து விடாதே. இனியாவது கருத்தாயிரு.''

பூதம் கத்தியைத் தீட்டிக் கொண்டு தன்னைத் துரத்தி வந்ததை நினைத்தாலுங்கூடத் துளசிக்குக் குலை நடுக்கமாக இருந்தது. எனவே, அவள் இத்தடவை, தான் தனது அண்ணன்மார் கூறியதற்கு மாறாக நடக்கவே கூடாது என்று உறுதியாக முடிவு செய்து

கொண்டதுடன் சகோதரர்களிடம் அப்படியே உறுதியும் கூறினுள். அன்பு நிறைந்த அண்ணன்மாரும் அழகிய தங்கையுமாக அவர்கள் அங்கே மாரிக்காலத்தில் பெரும் பகுதியையும் இனிமையாகக் கழித்துவந்தனர். அங்குள்ள அவ்வளவு செல்வத்துடனும் தங்கள் அருமைத் தங்கையுடனும் பெற்ருேர்களிடம் திரும்பிச் சேரும்போது அவர்களுக்கு ஏற்படப் போகும் மகிழ்வை எண்ணி அப் பிள்ளைகள் மனம் பூரித்தனர்.

அப்போது ஒரு நாள், சகோதரர்கள் யாவரும் காட்டுக்குச் சென்று கட்டை வெட்டித் தங்கள் பயணத்துக்காக வண்டி செய்து கொண்டிருந்தார்கள். துளசி தனியே வீட்டில் இருந்தாள். அப்போது படுகிழமான ஒரு வழிப் போக்கன் முக்கி முனகி அழுதுகொண்டே அக் குகை வீட்டுப் பக்கத்தில் வந்தான். துளசியைப் பார்த்தவுடன் அவன் தனக்கு ஏற்பட்ட துன்பத்தைத் தெரிவித்தான். வழியில் வாதாங்கொட்டை மரத்தின் மேல் ஒரு பெரிய கறுப்புப் பூனை இருந்ததாகவும், அதைத் தான் ஏறிட்டுப்பார்த்த போது அது சினங்கொண்டு ஒரு வாதாங்கொட்டையைத் தன் மீது வலுவாக வீசியதால் தன் பிடரியில் காயம் ஏற்பட்டுவிட்டதாகவும், அதனுல் தனக்கு வலி தாங்க முடியாமல் இருப்பதாகவும் அக்கிழவன் கூறினுன்.


"உனக்கு நான் என்ன செய்யவேண்டும்?" என்று துளசி அவனிடம் கேட்டாள்.

"ஊமத்தை இலையைத் தியில் வாட்டி எனக்கு ஒத்தடம் கொடுத்தால், வலி உடனே தணிந்துவிடும். புண் ஆறிவிடும்; ஆனுல். ஊமத்தை இலை இங்கே எங்கே கிடைக்கப்போகிறது?" என்று அக்கிழவன் இரங்கிக் கூறினுன்.

"சற்று இரு, நான் தேடிப்பார்க்கிறேன். வீட்டுத் தோட்டத்தில் ஒரு வேளை ஊமத்தைச் செடி முளைத் திருக்கும்" என்று கூறிவிட்டுத் துளசி வீட்டுப் பின் புறத்துக்கு ஓடிச் சென்றாள். அங்கே, பூதத்தைப் புதைத்திருந்த குழி மீது ஒரு பெரிய ஊமத்தைச் செடி தளதளவென்று வளர்ந்திருந்தது. வலி பொறுக்காமல் துடிக்கும் கிழவனுக்கு உதவி செய்வதில் ஆர்வமா யிருந்த துளசி, தன் அண்ணன்மார் கூறிய எச்சரிக் கையை மறந்து அந்த ஊமத்தைச் செடியின் இலைகளைப் பறித்துவந்து தீயில் வாட்டி அக் கிழவனுக்கு ஒத்தடம் கொடுத்தாள். அக் கிழவனுக்கு உடனே வலி தீர்ந்து விட்டது.

துளசி பிறகு வீட்டுக்குள் வந்து அண்ணன்மா ருக்கு உணவு படைப்பதற்காக இலை போடத் தொடங் கினாள். அதே சமயத்தில் சாளரத்தின் விளிம்பு மீது ஏழு அழகிய வெண் புறாக்கள் வந்து அமர்ந்து, "ஐயோ, எங்கள் அருமைத் தங்கையே, நீ ஏன் இப்படி மூடத்தனமாக நடந்து கொண்டாய்? அந்தக் கிழவனுக்கு நோவு தீர்ப்பதற்காக உன் அண்ணன்மார்க ளாகிய எங்களுக்குத் தீராத கேடு விளைவித்துவிட்டாயே! நாம் ஊருக்குத் திரும்புவதற்காக எல்லா ஏற்பாடுகளும் செய்து முடித்திருக்கும் இந்நேரத்தில், நம் தலையில் கல்லைப்போட்டுக் காரியத்தைக் கெடுத்து விட்டாயே; நாங்கள் புறாக்களாக மாற நேர்ந்துவிட்டதே. இனி எங் களை வானத்தில் பறக்கும் வல்லூறும் பைரியும் கழுகும் காட்டில் வாழும் கடும் பூனையும் பிய்த்துத் தின்று விடுமே. இந்த நிலையில் இருந்து தப்புவதற்கு ஒரே யொரு வழிதானுண்டு. நாங்கள் மீண்டும் மக்கள் உரு வடைவதற்கு என்ன செய்யவேண்டுமென்பதை ஊழி

தேவனின் தாயாரிடம் கேட்டுத் தெரிந்து வந்தால் மட்டுந்தான் நாங்கள் தப்ப முடியும்,'' என்று கூறின.



வெண்புருக்களாக மாறிய அண்ணன்மார்களைத் துளசி பார்த்தல்

புருக்கள் கூறியதைக் கேட்ட துளசிக்குத் துயரம் பொங்கி நெஞ்சு வெடித்து விடும் போல் இருந்தது. தன் அக்கறைக் குறைவால் தான், மறதியால் தான் தன் தமையன்மாருக்கு இந்நிலை ஏற்பட்டது என்பதை எண்ணியதும் அவள் மனம் மேலும் வெம்பியது.

தான் எப்படியாவது சென்று ஊழிதேவனின் தாயாரைக் கண்டு அவர்கள் உய்வதற்கான வழியைக் கேட்டறிந்து வருவதாகக் கூறித் தன்னைப் போக விடுமாறு அவள் தன் அண்ணன்மார்களைக் கேட்டுக் கொண்டாள். தான் வரும் வரையில் அவர்கள் வீட்டுக்குள்ளேயே பத்திரமாய் இருந்து வரவேண்டுமென்று மன்றாடினாள்.

"சரி, ஆனால், நீ போகவேண்டிய இடம் எட்டாத நெடுந்தொலையில் இருக்கிறதம்மா, நீ எப்படி அங்கே போக வேண்டுமென்று வழி கூறுவதற்குக் கூட எங்களுக்குத் தெரியாது," என்று அப்புறுக்கள் கூறின.

"அதைப்பற்றி நீங்கள் ஒன்றும் வருந்தவேண்டாம்; அது என் பொறுப்பு. வழி நெடுக ஒவ்வொருவரிடமும் கேட்டு வழி தெரிந்து கொள்வேன். உங்களுக்கு வேண்டிய உணவை வீட்டில் சேர்த்து வைத்துச் செல்கிறேன். நீங்கள் இரைதேட வெளியே செல்லவேண்டாம்," என்று துளசி கூறி விடைபெற்றுத் தன் பயணத்தைத் தொடங்கினாள்.

துளசி தன் சிற்றடிகள் எவ்வளவு விரைவாக நடக்குமோ அவ்வளவு விரைந்து கால் கடுக்க நடந்தாள். அன்று பொழுதடையும் வேளையில் அவள் கடற்கரை வந்து சேர்ந்தாள். அங்கே மலைபோல் ஓங்கித் திரண்ட பேரலைகள் சுற்றிச் சுழன்று கரைமீது மோதிக்கொண்டிருந்தன. கரையிலிருந்த பாறைக்கும், வானத்தை முட்டும் பேரலைகளுக்கும் நடுவே பெரிய திமிங்கிலம் ஒன்று சிக்கித் தவித்துக்கொண்டிருந்ததை அவள் கண்டாள். அது எவ்வளவுதான் முயன்றாலும் அதனால் அமைதி நிலவும் வெளிக் கடலுக்குச் செல்ல முடியவில்லை. கரைமீது நின்ற சிறு பெண்ணான துளசியைக் கண்டதும்,

அத் திமிங்கிலம் அவளை அன்போடழைத்து, "அம்மா! குழந்தாய், நீ எங்கே போகிறாய்?" என்று வினவிற்று.

"நான் ஊழிதேவனின் தாயாரைத் தேடிச் செல்கிறேன். அவள் இருக்குமிடம் எது என்பதை நீ எனக்குச் சொல்வாயா?" என்று துளசி திமிங்கிலத்திடம் கேட்டாள்.

"கரையோரமாகவே நீ செல்; செல்லும்போது இந்தப் பேரலைகள் உச்ச உயரத்தில் கரையோரக் குன்றுகளின் மீது ஓங்கி மோதும் ஓர் இடத்தைக் காண்பாய். அங்கே சென்றதும் வலதுபுறமாகத் திரும்பு. உனக்கு மேற்கொண்டு வழி சொல்லுவதற்கு அங்கே வேறொருவர் இருப்பார். நீ ஊழிதேவனின் தாயாரைக் காணும்போது எனக்காக ஒரு செய்தியைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்; அலைக்கும் பாறைக்கும் நடுவில் சிக்கித் தவிக்கும் நான் இதைவிட்டு வெளியேறுவதற்கு என்ன செய்யவேண்டும் என்பதைக் கேட்டுத் தெரிந்து என்னிடம் சொல்லவேண்டும்," என்று திமிங்கிலம் அவளிடம் கூறியது.

"நான் ஊழிதேவனின் தாயாரைக் காணமுடிந்தால் கட்டாயம் அதைக் கேட்டு வந்து சொல்கிறேன். நான் இப்போது விடைபெற்றுக் கொள்கிறேன்," என்று துளசி கூறிவிட்டுத் தன் வழியே சென்றாள்.

வெள்ளை அரிசியைப் பரப்பி வைத்தாற்போலிருந்த கடல் மணல் பரப்பு வழியே அவள் நெடுந் தொலை நடந்தாள். கடைசியில் திமிங்கிலம் குறிப்பிட்ட இடம் வந்தது. மலையுச்சியைத் தொட்டு வீசும் பேயலைகள் பேரிரைச்சலோடு கரைமீது புடைத்துக் கொண்டிருந்தன. அங்கு வந்ததும் துளசி வலதுபுறம் திரும்பினாள். அங்கே இரு

புறமும் சோலைகள் செறிந்திருந்தன. கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் பசும்புல் தரை பச்சைப் பாயல் விரித்தது போலிருந்தது. புல் தரையில் அங்கங்கே இருந்த பூத்திடல்கள் பல நிற மணிகள் பதித்தன போலிருந்தன.

எழில் நிரம்பி விளங்கிய அவ்வழியே துளசி பத்தடிதான் நடந்திருப்பாள். அதற்குள் அவளருகே "அழகுருவான சிறு பெண்ணே! எங்கம்மா செல்கிறாய்?" என்று ஒரு சிறு குரல் கேட்டது. துளசி திரும்பிப் பார்த்தாள். தன்னைப் பார்த்து அவ்வாறு கேட்டது ஒரு சிறு சுண்டெலி என்பதைக்கண்டு வியப்பெய்தினாள்.

"சின்னஞ் சிறு சுண்டெலியே! நான் ஊழிதேவனின் தாயார் மாளிகையைத் தேடிச் செல்கிறேன். நீ எனக்கு வழி சொல்வாயா?" என்று அவள் கேட்டாள்.

"ஐயோ! அது எத்தனை தொலைவில் இருக்கிறது தெரியுமா உனக்கு? சரி, இருந்தாலும் நீ மனங் கலங் வேண்டாம். நீ விடாமுயற்சியுடன் இருந்தால், உவ காலத்தில் அங்கே போய்ச் சேர்ந்துவிடலாம். இதோ இந்தப் பசும்புல் வெளியைக் கடந்து சென்றதும், அதோ தெரிகின்ற மலையடிவாரத்தை அடைவாய். அங்கே உனக்கு வழிசொல்ல வேறொருவர் இருப்பார்," என்று சுண்டெலி கூறியது.

"நல்லது, சுண்டெலியே! நீ செய்த உதவிக்கு என் நன்றி; உனக்கு நான் ஏதாவது உதவிசெய்ய வேண்டுமா? என்னால் முடிந்ததைச் செய்கிறேன்," என்றாள் துளசி.

"ஆமாம். நீ எனக்கு ஓர் உதவி செய்யவேண்டும். பூனைகளிடமிருந்து தப்புவதற்குச் சுண்டெலிகள் என்ன செய்யவேண்டும் என்பதை நீ ஊழிதேவனின் தாயா

ரிடம் கேட்டுத் தெரிந்து, என்னிடம் வந்து சொல்வாயா? நான்தான் சுண்டெலிகளின் அரசன். நீ அந்த உதவியைச் செய்தால், நானும் என் குடிகளான எல்லா எலிகளும் உனக்கு உற்ற ஊழியராக இருந்து பணி செய்வோம்,'' என்றது சுண்டெலி.

"கட்டாயம் கேட்டுவருகிறேன், சுண்டெலி அரசே! இப்போது விடைபெற்றுக் கொள்கிறேன்,'' என்று கூறிவிட்டு, துளசி அப் பச்சைப் பசும்புல் வெளியூடே சென்றாள்.

அங்கிருந்து பார்க்கும்போது மலையடிவாரம் அருகில் இருப்பது போல் தெரிந்தது. ஆனால், போகப் போக அதுவும் நகர்ந்துகொண்டே செல்வதுபோல் இருந்தது. ஆயினும் துளசி மனந்தளர்ந்துவிடாமல். மேலும் மேலும் நடந்தாள். கடைசியில் ஒருவாறு அவள் அந்த அடிவாரத்தை அடைந்தாள். அங்கே வந்ததும் சிற்றெறும்புகள் படைபடையாக அணிவகுத்துச் சென்றதைக் கண்டாள். ஒவ்வொரு சிற்றெறும்பும் வாயில் அரிசி மணியைக் கவ்விச் சென்றது. துளசியைக் கண்டவுடன் படைகளுக்குத் தலைமையாகச் சென்ற பெரிய எறும்பு தன் வாயிலிருந்த பெரிய அரிசி மணியைக் கீழே வைத்துவிட்டு, "அம்மா! எழிலணங்கே! நீ எங்கே போகிறாய்?'' என்று அவளைக் கேட்டது.

"நான் ஊழிதேவனின் தாயார் மாளிகையைத் தேடிச் செல்கிறேன். எனக்கு வழி சொல்லுவாயா, எறும்பே?'' என்று துளசி கேட்டாள்.

"அதோ மலை இடுக்குத் தெரிகிறது பார். அதன் வழியாகச் சென்றால், சம பரப்பான நிலப்பகுதியை அடையலாம். அந்தச் சம வெளியில் நேராகச் செல்;

அதன் கடைசி எல்லையில் இன்னொருவர் உனக்கு வழி காட்டக் காத்திருப்பார். மனஞ்சோர வேண்டாம். இனி நீ நெடுந்தொலை செல்லவேண்டியதிராது. கலங்காமல் போ, அம்மா,'' என்று அந்த எறும்பு கூறியது.


''அன்பு மிக்க எறும்பே! உனக்கு என் நன்றி. நான் உனக்கு ஏதாவது உதவிசெய்ய முடியுமா?'' என்று துளசி கேட்டாள்.

''ஆம், அம்மா. ஊழிதேவனின் தாயாரைக் கண்டவுடன் அவளிடம் எங்களுக்காக ஒரு யோசனை கேட்டு வரவேண்டும். நாங்கள் இவ்வளவு சுறுசுறுப்பாக உழைத்து உணவைச் சேர்த்துவைத்தும், அதனால் எங்களுக்குப் பயனில்லாமலே போகிறது. மழைக்காலத்துக்கென்று நாங்கள் உணவைத் திரட்டுகிறோம். மழை வந்ததும் நாங்கள் மடிந்து விடுகிறோம். இதிலிருந்து தப்புவதற்கு எங்களுக்கு ஒரு வழி தெரிந்து வந்து கூறுவாயா?'' என்று எறும்பு கேட்டது.

''கட்டாயம் சொல்லுகிறேன், சிற்றெறும்பே! கவலைப்படாதே,'' என்று துளசி சொல்லி, விடை பெற்றுக்
கொண்டு மலை இடுக்கு வழிய னே அவன் யாரென்பதும்
சென்றாள்.
விட்டது. அக் கிழவனுக்கு
மறுநாள் மாலைப் பெ ய்த்தான் தனக்கு இவ்வளவு
கடைசி எல்லைக்கு வந் தை உணர்ந்தாள்.
பெரிய ஆலமரம் கிளை
கள் தூண்கள் போ கண்டதும் தலை தூக்கி, ''அம்மா,
இருந்தன. தரையாக நீ எவ்வளவு துன்பத்துக்கு
வெடித்து உதிர்ந்து என்னால் யாருக்குமே உதவி ஏற்படு
; மாறாக, என்னால் பிறருக்குக் கெடுதி
எத்தனையோ
ஆனால், எனக்குத்தான் சாக்காலம்
ளும் அந்த ஆலமரப் ! ஆயினும் நான் உயிர் போவதற்குள்

சிறு பெண்ணே! நெடுந்தொலை நடந்து களைத்து வா
திருக்கிறாய். நீ என் நிழலில் அயர்ந்து சற்று இளைப்
பாறு,'' என்று சொல்லிற்று.

"தாய்போல் கனிந்து பேசும் ஆலமரமே! நீ கூறிய படியே செய்கிறேன். அது எனக்கு மிகவும் ஆறுதலாக இருக்கும். ஆனால், நான் ஊழிதேவனின் தாயார் இருக்கும் இடம் தேடிப் போகிறேன். சீக்கிரம் அங்கே போய்ச் சேர வேண்டும்,'' என்றாள் துளசி.



"அம்மா, நீ செல்ல வேண்டிய இடம் அருகில் தான் இருக்கிறது. சற்று விரைவாக நடந்தால், இன்றிரவே நீ அங்கே போய்ச் சேர்ந்து விட

பரிய எறும்பு தன் வாயில் லாம். அங்கே போன
யைக் கீழே வைத்துவிட்டு, ' வுடன் நீ எனக்கு ஓர்
நீ எங்கே போகிறாய்?'' என்று உதவி செய்யவேண்டும்.
ருமையாக மதித்துப்
"நான் ஊழிதேவனின் தா
, ஆடுகளுக்குக் குறை
தேடிச் செல்கிறேன். எனக்கு வ
ன்படுத்துகிறார்கள்;
எறும்பே?'' என்று துளசி கேட்டாள்
றது. நான் மதிப்
"அதோ மலை இடுக்குத் தெரிகி பர் மதிப்பை அடை
வழியாகச் சென்றால், சம பரப்பா என்பதை நீ ஊழி
அடையலாம். அந்தச் சம வெளியில் தரிந்து எனக்குச்

சொல்லவேண்டும்; செய்வாயா, அம்மா?'' என்று ஆல மரம் கேட்டது.

"ஆகா, கட்டாயம் செய்கிறேன். இப்போது போய் வருகிறேன். உனக்கு என் நன்றி,'' என்று துளசி கூறி விட்டு, ஊக்கத்தோடு விரைந்து நடந்தாள். தான் இவ்வளவு அரும்பாடுபட்டுத் தேடிவந்த இடம் எட்டி விட்டது என்ற நினைப்பும், தன் அண்ணன்மார்களுக்கு விடிவு காலம் நெருங்கிவிட்டது என்ற எண்ணமும் அவள் மனதில் மட்டிலா மகிழ்ச்சியை உண்டு பண்ணின.

ஆலமரம் கூறியதுபோல் அவள் அன்று மாலை யிலேயே செங்குத்தான மலைஅடிவாரத்துக்கு வந்து விட்டாள். அதன் உச்சியில்தான் ஊழிதேவனின் தாயார் இருந்த மாளிகை இருந்தது. களைப்பு மிகுந் திருந்த துளசி உடல் சோர்ந்து அங்கிருந்த கல்மீது உட்காரப் போனாள். சிறிது இருந்து மூச்சு வாங்கி விட்டுச் செல்ல நினைத்தாள். கல்லில் உட்கார்ந்ததுமே அருகில் புல்லில் ஒரு கிழவன் சுருண்டு மடங்கிக் கிடப் பதைக் கண்டாள்; உடனே அவன் யாரென்பதும் அவளுக்கு நினைவு வந்துவிட்டது. அக் கிழவனுக்கு ஒத்தடம் கொடுக்கப்போய்த்தான் தனக்கு இவ்வளவு தீமையும் வந்தது என்பதை உணர்ந்தாள்.

அவன் அவளைக் கண்டதும் தலை தூக்கி, "அம்மா, குழந்தாய், எனக்காக நீ எவ்வளவு துன்பத்துக்கு உள்ளாகிவிட்டாய்! என்னால் யாருக்குமே உதவி ஏற்படு கிறதில்லை. அதற்கு மாறாக, என்னால் பிறருக்குக் கெடுதி தான் விளைகிறது. ஆனால், எனக்குத்தான் சாக்காலம் நெருங்கிவிட்டதே! ஆயினும் நான் உயிர் போவதற்குள்

உனக்கு ஒரு நல்ல அறிவுரை கூறுகிறேன் ; அதனால் உனக்கு நன்மை ஏற்படும்," என்று கூறினான். மேலும் அவன் கூறியதாவது :

" நீ இந்த மலையுச்சியில் ஏறியதும் மிகமிகப் பழமையான மாளிகை ஒன்றைக் காண்பாய் ; அது எவ்வளவு பழமையானது என்பதை, இந்த நொடியிலேயே நொறுங்கி விழுந்துவிடும்போல் இருக்கும் அதன் சுவர்களிலிருந்தே தெரிந்துகொள்வாய் ; அங்கே நெடுகிலும் தூசி படிந்து, நூலாம்படை படர்ந்து இருக்கும். துருப்பிடித்திருக்கும் வெளிமதில் கதவைக் கடந்ததும், உடைந்து விழுந்துகிடக்கும் சில தூண்களை நீ காண்பாய். அவை மீது ஒரு பாம்பு தன் நாக்கைக் கடித்துக்கொண் டிருக்கும் ; ஒரு மான் நிற்கும் ; அண்டங் காக்கை ஒன்று உறுத்துப் பார்த்துக்கொண் டிருக்கும் ; அண்டரண்டப் புள் ஒன்று வட்டமிட்டுப் பறந்துகொண்டிருக்கும். அவைகளை நீ பொருட்படுத்தாமல் நேரே வீட்டினுள்ளே செல். அங்கே சுவர்களின் ஓரமாய் சாம்பல் குவியல்கள் பல இருக்கும் ; ஒவ்வொன்றும் மறைந்துபோன மாநகர்கள் ஒவ்வொன்றின் பெயரைத் தாங்கி நிற்கும். அந்த அறையில் ஒரு பெரிய மணிக்கூண்டு இருக்கும். நீ அதனுள் சென்று ஒளிந்துகொள்ள வேண்டும். ஊழி தேவன் வெளியே பறந்து செல்வது வரையில் நீ அங்கே மறைந்து கொண்டிரு ; அவன் கூப்பிடு தொலை தாண்டியிருப்பான் என்று தெரிந்ததும், நீ உள்ளே புகுந்து நேரே அடுத்த அறைக்குள் செல் ; அங்கே ஒரு பெரிய மணியின்மீது ஒரு கிழவி உட்கார்ந்திருப்பதைக் காண்பாய். அவளது தலைமயிர் நரைத்துச் சுருண்டு சடை சடையாகத் தொங்கும் ; பெரிய தொள்ளைக் காது தரையைத் தொட்டுக்கொண்டு துவண்டு கிடக்கும்.

மேல் எல்லாம், தோல் சுருக்கம் விழுந்து கோடு கோடாக இருக்கும் ; கண்கள் குழிவிழுந்து போயிருக்கும் ; பல்லில்லாத பொக்கைவாய் முணுமுணுத்துக்கொண்டே இருக்கும். நீ உள்ளே சென்றதும் முதல் வேலையாக மணியின் நாக்கைக் கயிற்றினுல் இழுத்துக் கட்டிவிடு ; பிறகு அது ஆடாது ; மணி அடிக்காது. நீ அவ்வாறு செய்துவிட்டால், அக் கிழவி நீ கேட்டதை எல்லாம் தரவேண்டியது தான். அவள் எதன் பேரிலாவது ஆணையிட்டு, அது உறுதி என்று கூறுவாள். நீ சற்று விழிப்பாய் இருக்க வேண்டும். அவள் 'தன் மகனுன ஊழிதேவனின் சிறகுகள்மீது ஆணை,' என்று சொன்னுல் மட்டும்தான் உறுதி. வேறு எந்தப் பொருள்மீது ஆணையிட்டாலும் அவள் தன் சொல்லைக் காப்பாற்றமாட்டாள். சரி, அம்மா, இனி நீ போய் வா. உன் பயணத்தின் முடிவு உனக்கு நன்மையாகவே இருக்கும்.''

கிழவனின் அன்பு மொழிகளைக் கேட்டதும் துளசிக்கு மிக்க ஆறுதல் ஏற்பட்டது. மெள்ள மெள்ள அவள் மலைஉச்சிமீது ஏறி முகட்டை அடைந்தாள். எல்லாம் கிழவன் கூறியவைபோலவே இருந்தன. பழங்கால நகரங்களின் சாம்பல் குவிந்திருந்த அறைக்கு வந்ததும் துளசி, மணிக்கூண்டுக்குள் ஒளிந்துகொண்டாள். அப்போதுதான் ஊழிதேவன் வெளியே பறந்துகொண்டிருந்தான். அவன் ஓங்கி உயர்ந்த நெடியவனுக இருந்தான். நீண்டு வளர்ந்திருந்த நரைமயிர் அவன் குதிங்கால் வரையில் தொங்கிக்கொண்டிருந்தது. ஒரு கையில் காலத்தை எடைபோடுவதற்கான துலாக்கோலும் மற்ெருரு கையில் ஒரு மணியும் இருந்தன. முதுகில் வெண்ணிறமான இரு பெருஞ் சிறகுகள் இருந்தன. அச் சிறகுகளைப் புடைத்துக்கொண்டு அவன் பறந்துவரும்



மணிக்கூண்டுக்குள் துளசி ஒளிந்து கொள்ளல்

போது காற்று பேரிரைச்சலிட்டுக்கொண்டு வீசிற்று. அவன் வெளியே போனானோ இல்லையோ, துளசி தன் மறைவிடத்திலிருந்து வெளியே வந்து சாளரத்தின் வழியாக வானத்தைப் பார்த்தாள். ஊழிதேவன் அதற்குள் கண்ணுக்கு எட்டாத தொலை சென்று விட்டான். ஒரு நொடிக்குள் அவன் ஆயிரம் மைல் தூரம் பறந்து விட்டான். துளசி உடனே அந்த அறைக்குள் நுழைந்தாள். ஊழிதேவனின் தாயார் மணிமீது அமர்ந்திருப்பதைக் கண்டாள் துளசி ; உடனே சட்டென்று அவள் மணியின் நாக்கை இழுத்துக் கட்டிவிட்டாள். பிறகு, தான் கேட்கவேண்டியதை அவளிடம் கேட்டாள். ஊழி ஊழியாய் உயிரோடிருந்துவரும் அக் கிழவி, உடனே தன் மகனைக் கூவி அழைத்தாள்.

" நீ, உன் மகனைக் கூப்பிடுவதில் பயன் இல்லை; நான் மணியின் நாக்கைக் கட்டிவிட்டேன். நான் அதை அவிழ்ப்பது வரையில் அவனால் நகரக்கூட முடியாது," என்று துளசி கூறினாள்.

அதைக் கேட்டதும் அக் கிழவி துளசியிடம் கெஞ்சிப் பேசினாள் :

கிழவி : அம்மா! குழந்தாய்! நீ மணி நாக்கை அவிழ்த்து விடு ; நீ கேட்டதை எல்லாம் நான் உனக்குத் தருகிறேன். கட்டாயம் தருகிறேன் ; என்னை நம்பு.


துளசி : முடியாது, அம்மா ; நான் மாட்டேன்.

கிழவி : மணி நாக்கை அவிழ்த்து விடு, கண்ணே ! என் மகன் தலைமீது ஆணை ; நீ கேட்டதை எல்லாம் தருகிறேன்.

துளசி : முடியாது, அம்மா ; முடியாது.

கிழவி : கட்டை அவிழ்த்து விடு, பாப்பா! என் மகன் கண்மீது ஆணை ; நீ கேட்டது கிடைக்கும்.

துளசி : முக்காலும் முடியாது, அம்மா.



ஊழிதேவனின் அன்னையும் துளசியும்

பிறகு கிழவி, "சரி, அம்மா, சரி ; நீ மணியின் நாக்கை அவிழ்த்து விடு ; உலகமெங்கும் ஓங்கி வீசிப் புடைக்கும் என் மகனின் வெள்ளைச் சிறகு மீது ஆணை ;

நீ கேட்டது கிடைக்கும்," என்று கிழவி பெரு மூச்சுடன் உண்மையாகவே உறுதி கூறினாள்.

உடனே துளசி மணியின் நாக்கை அவிழ்த்து விட்டு விட்டு, காலக் கிழவியின் காலைத் தொட்டுக் கும்பிட்டு நின்றாள். துளசி அவ்வளவு வணக்க ஒடுக்கமாகப் பணிந்ததைக் கண்ட கிழவிக்கு அவள் மீது அன்பும் பரிவும் ஏற்பட்டன. அவள் மனம் இளகிவிட்டது. துளசியைக் கையால் அணைத்துக்கொண்டு பின்வருமாறு கூறினாள்:

"நீ சென்று அக் கதவின் பின்னால் ஒளிந்துகொள். என் மகன் வந்ததும் உனக்குத் தெரியவேண்டியதை அவனிடமிருந்து நான் கேட்டுத் தெரிந்து சொல்கிறேன். ஆனால், நீ அவன் கண்ணில் பட்டுவிடாதே. அவனுக்கு ஆறாத சினம் மூண்டுவிடும். தனக்குப் பிடிக்காத செயலை யார் செய்தாலும் அவன் பொறுக்கமாட்டான். தன் சொந்தப் பிள்ளைகளானாலும் கூடத் தனக்கு மாறாக நடந்தால், அவன் அவர்களை நையப் புடைத்துவிடுவான். உன்னைப் பார்த்துவிட்டால், அவ்வளவுதான்; அப்படியே தூக்கி விழுங்கிவிடுவான்."

துளசியும் அவள் சொல்வதுபோல் செய்வதாகக் கூறி, தனக்குத் தெரியவேண்டிய தகவல்கள் ஒவ்வொன்றையும் விவரித்துச் சொல்லிவிட்டு, கதவின் மறைவில் ஒளிந்துகொண்டாள். ஊழி தேவன் திரும்பி வந்ததும், கிழவி தன் மகனிடம் ஒவ்வொரு கேள்வியாக அவ்வளவையும் கேட்டாள். கிழவி வெகு நேரம் மன்றாடிக் கெஞ்சிய பின், ஊழிதேவன் அத்தனை கேள்விகளுக்கும் விடையளித்தான்:

"ஆலமரத்தின் அடியில் புதைத்திருக்கும் நிதிக் குவியலை அப்புறப்படுத்தி விட்டால், எல்லா மக்களும்

முன்போலவே அம் மரத்தை அன்புடன் மதிப்பார்கள்; அதை நாடிவருவார்கள். பூனையின் வாலில் மணியைக் கட்டிவிட்டால், எலிகளுக்குத் தப்பிக்கொள்ள வழி பிறக்கும். மழைக்காலத்தில் எறும்புகளுக்கு ஈசல்போல் இறக்கை முளைக்காமல் இருந்தால், அவை நூறு ஆண்டு வாழும். இறக்கை முளைத்தால் அவைகளுக்குச் சாக் காலம் வந்துவிட்டது என்றுதான் பொருள். திமிங்கிலம் கடல் பாம்புடன் நட்பாக நடந்துகொண்டால், அது ஆழத்திலுள்ள பத்திரமான வழியைத் திமிங்கிலத்துக் குக் காட்டிக் கொடுக்கும்; வெளிக் கடலுக்குச் சென்று விடலாம்; ஏழு புறுக்களும் செல்வத்தின் உறைவிடத் தில் சென்று அமர்ந்ததும் இயல்பான உருவம் கிடைத்து விடும்."

இவ்வளவும் சொல்லி முடித்துவிட்டு ஊழிதேவன் மீண்டும் வெளியே பறந்துவிட்டான். கிழவி துளசியைக் கூப்பிட்டு, அந்த வழிகளை எல்லாம் தெரிவித்தாள். துளசி கிழவிக்கு மனமார நன்றி தெரிவித்துவிட்டு, மலை யடிவாரத்துக்கு விரைந்தோடி வந்தாள். அங்கே அவள் தன் அண்ணன்மார்களான ஏழு புறுக்களையும் கண்டாள். அவை துளசி கூறியதுபோல் வீட்டிலேயே இருக்க வில்லை; அவள் சென்ற இடத்துக்கெல்லாம் பறந்து வந்துகொண்டிருந்தன. அவளைக் கண்டதும் அவை கீழே இறங்கி வந்து, அருகிலுள்ள தாமரைப் பொய்கை யில் அன்று மலர்ந்திருந்த செழுங் கமல மலர்கள் மீது அமர்ந்தன. என்ன விந்தை! ஏழு புறுக்களும் புது அழ குடன் துளசியின் ஏழு அண்ணன்மார்களாக இயற்கை உருவம் எய்திவிட்டன. செந்தாமரைதான் செல்வத் துக்கு இறைவியான திருமகளின் உறைவிடமாதலால், ஊழிதேவன் கூறியதுபோலவே நடந்துவிட்டது.